# ஸ்ரீ கோபால ஸஹஸ்ரநாமம்

## ( ஸம்மோஹன தந்த்ரம்)

போர்ட்பிளேயர் ஸ்ரீ ராதா கோவிந்த்

வெளியீடு:

**ஸ்ரீ லக்ஷ்மி ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்**

நெ.9. ராமகிருஷ்ணா நகர், முத்தியால் பேட்டை,
புதுச்சேரி -3. போன்: 0413-2260096

# ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ பெருமாள்

# ஸ்ரீ கோபால ஸஹஸ்ரநாமம்

## ( ஸம்மோஹன தந்த்ரம்)

வெளியீடு:

**ஸ்ரீ லசக்ஷ்மி ஸரஸ் மாருதி ட்ரஸ்ட்**

நெ.9, ராமகிருஷ்ணா நகர், முத்தியால் பேட்டை,
புதுச்சேரி -3, போன்: 0413-2260096

# முன்னுரை

ஸ்ரீ கோபால ஸஹஸ்ர நாமம்!

அடியோங்களுடைய ஆசார்ய வள்ளலாகிய ஸ்ரீஉ-ப-வே கோடிகன்னிகாதானம் ஸுந்தர தாதாசாரியாருடைய விசேஷ கருணையின் பயனாய் அவரது ஆராத்ய தெய்வம் கண்ணனைப் பற்றி இந்த அபூர்வ ஸஹஸ்ரநாமம் கிடைத்தது. ஆகம ஸாஸ்திர வகையில் காணும் ஸ்ரீஸம்மோஹன தந்திரத்தில் ஸாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணனேஇதை ராதைக்கும்,பரமசிவனுக்கும் உபதேசிக்க பின் பார்வதி உப தேசமாகப் பெற்று ஸ்ரீநாரத மகரிஷிக்கு கூற மிகவும் விரல் விட்டு எண்ணக்கூடிய மனிதர்கள் அறியப் பெற்றனர். ஸ்ரீகிருஷ்ணனின் லீலா விநோதங்கள் கேட்கக் கேட்க ஆச்சரியமும், ஆத்மானுபவமும் தரக்கூடியவை. அவர் செய்தருளிய நன்மைகள் எண்ணிலடங்கா. இந்த ஸ்தோத்திரத்திற்கு ஸம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தை மட்டும் இங்கு கூறுகிறேன். ராதை, மாதவ தத்துவம் ஜீவாத்மாத்களாகிய நமக்காகவே ஸ்ரீகிருஷ்ணன் உபதேசித்த மகத்தான ரஹஸ்யம். ராதை இந்த பூமியில் பிறப்பு- இறப்பு சிக்கலில் தவிக்கும் ஜீவனின் பிரதிபிம்பம். ராதையைப் போன்ற அசஞ்சலமான அன்பு கண்ணனிடம் நாம் கொண்டோமானால் நம்மையும் ராதையைப் போல் கொண்டாடி உயர்ந்த ஆத்மானுபவத்தைத் தருவான். கண்ணனே நம் வசப்பட்டால் நமக்குத் கிட்டாதது என்ன இருக்க முடியும் லௌகீக, பாரலௌகீக, பயன்களை ஒருமிக்க அள்ளி அள்ளி அருளும் கண்ணனின் பிரீதியால் யாவும் பெறலாம். இந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்ய ஒருவர் உயர்ந்த அதிர்ஷ்டத்தைச் செய்திருக்க வேண்டும். இதைக் கேட்க படிக்க நாம் பெறும் ஆனந்தமே விலை மதிப்பற்றது. செவிக்கும், மனதிற்கும் இன்பம் பயப்பது. யாவரும் இதை பாராயணம் செய்வீர்களாக.

மிக அரிதான இந்த பொக்கிஷத்தை கருணையுடன் காட்டித்தந்த அடியோங்களுடைய ஆசாரிய ஸ்வாமிகள் கோடிகன்னிதாதானம் ஸ்ரீஉ-ப-வே ஸுந்தர தாதாசாரியார் திருவடிகளில் ஸமர்பிக்கிறேன். இதை சிறந்த முறையில் கருத்துரையுடன் வெளியிட்ட நாவல்பாக்கம் ஸ்வாமிக்கு கிருதஜ்ஞதை தெரிவிக்க வகையைறியேன். ஸ்வாமி திருவடிகளில் தொண்டன் ஸமர்பிப்பதே அடியோங்கள் செய்யக் கூடியது.

இங்ஙனம்
**ஸ்ரீமதி விஷ்ணுபிரியா**



# ஸ்ரீ கோபால ஸஹஸ்ரநாமம்

अस्य श्रीगोपालसहस्रनामस्तोत्रमहामन्त्रस्य, श्रीनारद ऋषिः, अनुष्टुप्छन्दः,
श्रीगोपालो देवता, कामो बीजम्, माया शक्तिः, चन्द्रः कीलकम् ।
श्रीकृष्णचन्द्रभक्तिरूपफलप्राप्तये श्रीगोपालसहस्र नामजपे विनियोगः ।।

அஸ்ய ஸ்ரீகோபாலஸஹஸ்ரநாம ஸ்தோத்ர மஹா மந்த்ரஸ்ய ஸ்ரீநாரத ரிஷி: அனுஷ்டுப்சந்த: ஸ்ரீகோபாலோ தேவதா காமோ பீஜம் மாயாஶக்தி:, சந்த்ர:, கீலகம், ஸ்ரீக்ருஷ்ணசந்த்ர பக்தி ரூப பலப்ராப்தயே ஸ்ரீகோபாலஸஹ்ஸ்ரநாம ஜபே விநியோக:

த்யானம் -

कस्तूरीतिलकं ललाटपटले वक्षस्थले कौस्तुभं
नासाग्रे वरमौक्तिकं करतले वेणुं करे कङ्कणम् ।
सर्वाङ्गे हरिचन्दनं सुललितं कण्ठे च मुक्तावलिं
गोपस्त्रीपरिवेष्टितो विजयते गोपालचूडामणिः ।।

கஸ்தூரிதிலகம் லலாடபலகே வக்ஷஸ்தலே கௌஸ்துபம்
நாஸாக்ரே வரமௌக்திகம் கரதலே வேணும் கரே கங்கணம் ।
ஸர்வாங்கே ஹரிசந்தநம் ஸுலளிதம் கண்டே ச முக்தாவளிம்
கோபஸ்த்ரீபரிவேஷ்டிதோ விஜயதே கோபாலசூடாமணி: ॥ 1

கோபாலர்களுக்குத் தலைவனான ஸ்ரீக்ருஷ்ணன் நெற்றிப் பலகையில் கஸ்தூரியினாலாகிய திலகத்தையும், திருமார்பில் கௌஸ்துபமணியையும், மூக்கின் நுனியில் உயர்ந்த முத்துத் திருகையும், திருக்கைகளில் கங்கணத்தையும், புல்லாங்குழலையும், திருமேனி பூராவும் ஹரிசந்தனத்தையும், கழுத்தில் முத்துமாலையையும் தரித்துக்கொண்டு கோபஸ்த்ரீகளால் சூழப்பட்டவராய் விளங்குகிறார்.

फुल्लेन्दीवरकान्तिमिन्दुवदनं बर्हावतंसप्रियं
श्रीवत्साङ्कमुदारकौस्तुभधरं पीताम्बरं सुन्दरम् ।
गोपीनां नयनोत्पलार्चिततनुं गोगोपसङ्घावृतं
गोविन्दं कलवेणुवादनपरं दिव्याङ्गभूषं भजे ।।

புல்லேந்தீவரகாந்திமிந்துவதனம் பர்ஹாவதம்ஸப்ரியம்
ஸ்ரீவத்ஸாங்கமுதாரகௌஸ்துபதரம் பீதாம்பரம்ஸுந்தரம் ।
கோபீனாம் நயனோத்பலார்சிததனும் கோகோபஸங்காவ்ருதம்
கோவிந்தம் கலவேணுவாதநபரம் திவ்யாங்கபூஷம் பஜே ॥ 2

மலர்ந்த கருநெய்தல் புஷ்பம் போன்ற காந்தியை உடையவரும், மயில் தோகையை சிரோபூஷணமாகக் கொள்வதில் ப்ரீதியை உடையவரும், ஸ்ரீவத்ஸம் என்கிற மச்சம் அடையாளம் உடையவரும், கொடையாளியான கௌஸ்துப மணியைத் தரிப்பவரும், மஞ்சள் நிறமான பட்டு வஸ்த்ரம் உடுப்பவரும், அழகானவரும், கோபஸ்த்ரீகளின் கண்களினால் பூஜிக்கப்பட்ட திருமேனியை உடையவரும், பசுமாடுகள், இடையர்கள் இவர்களின் கூட்டத்தால்

சூழப்பட்டவரும், காதுக்குக் கேட்பதற்கு இனிமையான புல்லாங் குழல் ஒலியை ஒலிப்பவரும், திவ்யமான பூஷணங்களை தரிப்பவரு மாகிய கோவிந்தனை பக்தியுடன் துதிக்கிறேன்.

## ।। अथ गोपालसहस्रनामस्तोत्रप्रारम्भः ।।

## *இனி கோபால ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத் தொடக்கம்*

ओं क्लीं देवः कामदेवः कामबीजशिरोमणिः ।
श्रीगोपालो महीपालो वेदवेदान्तपारगः ।।
ஓம் க்லீம் தேவ: காமதேவ: காமபீஜஶிரோமணி: ।
ஶ்ரீகோபாலோ மஹீபாலோ வேதவேதாந்தபாரக: ॥ 1

தேவன் விரும்பியவற்றைக் கொடுப்பவன், விரும்பிய பலன் களைக் கொடுப்பவைகளில் உயர்ந்தவன். பிராட்டியுடன் கூடிய கோபாலகன், பூமியைக் காப்பவன். வேதங்களிலும், உபநிஷத்துக் களிலும் கரைகண்டவன்.

कृष्णः कमलपत्राक्षः पुण्डरीकः सनातनः ।
गोपतिर्भूपतिः शास्ता प्रहर्ता विश्वतो मुखः ।।
க்ருஷ்ண: கமலபத்ராக்ஷ: புண்டரீக: ஸநாதந: ।
கோபதிர் பூபதி: ஶாஸ்தா ப்ரஹர்த்தா விஶ்வதோ முக: ॥ 2

பூமிக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பவன், தாமரை மலர்களைப் போன்ற கண்களை உடையவன், தாமரை மலர்போன்ற ஹ்ருதயத்தில் வசிப்பவன். நித்யன், இடையன், அதாவது பசுக் களை ரக்ஷிப்பவன், பூமிக்குப் பதி, எல்லோரையும் ஆள்பவன், சத்ருக்களை ஒடுக்குபவன் அல்லது கட்டளையிடுபவன், சத்ருக் களைக் கொல்பவன், எல்லாவிடத்திலும் தன்னுடைய முகங்களை உடையவன்.

आदिकर्ता महाकर्ता महाकालः प्रतापवान् ।
जगज्जीवो जगद्धाता जगद्भर्ता जगद्वसुः ।।
ஆதிகர்தா மஹாகர்தா மஹாகால: ப்ரதாபவான் ।
ஜகஜ்ஜீவோ ஜகத்தாதா ஜகத்பர்த்தா ஜகத்வஸு: ॥ 3

மூலகாரணமாக இருந்துகொண்டு ஜகத்தை ஸ்ருஷ்டிப்பவன் ப்ரளய காலத்தில் ப்ரபஞ்சத்தைத் தன்னில் ஒன்றும்படி செய்பவன். விபுல ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிப்பவன், பராக்ரமமுடையவன், உலகிலுள்ளவர்களை ஜீவிக்கும்படி செய்பவன், உலகை தரிப்பவன், உலகுக்கு ஸ்வாமீ, உலகில் வ்யாபித்து வசிப்பவன்.

मत्स्यो भीमः कुहूभर्ता हर्ता वाराहमूर्तिमान् ।
नारायणो हृषीकेशो गोविन्दो गरुडध्वजः ।।

மத்ஸ்யோ பீம: குஹூபர்தா ஹர்த்தா வாராஹமூர்திமான் ।
நாராயணோ ஹ்ருஷீகேசோ கோவிந்தோ கருடத்வஜ: ॥ 4

மத்ஸ்யாவதாரத்தை மேற்கொண்டவன், பயங்கரமானவன், குஹூ என்கிற கலைக்கு பர்த்தா, ஆச்ரிதர்களுடைய பாபத்தைப் போக்குபவன், வராஹரூபீ, நாராயணன், ஹ்ருஷீகேசன் அதாவது இந்த்ரியங்களை அடக்கியவன், கோவிந்தன், கருடனோடு கூடிய கொடியை உடையவன்.

गोकुलेन्द्रो महीचन्द्रः शर्वरीप्रियकारकः ।
कमलामुखलोलाक्षः पुण्डरीकः शुभावहः ।।

கோகுலேந்த்ரோ மஹீசந்த்ர: சர்வரீப்ரியகாரக: ।
கமலாமுகலோலாக்ஷ: புண்டரீக: சுபாவஹ: ॥ 5

கோகுலத்துக்கு அதிபதி, பூமிக்குச் சந்திரன் போன்றவன், இரவில் ப்ரியத்தைத் தருபவன், பிராட்டியினுடைய முகத்தைப் பார்ப்பதில் ஆசையுடையவன், தாமரை மலரைப் போன்றவன், பக்தர்களுக்கு மங்களத்தைத் தருபவன்.

दुर्वासाः कपिलो भौमः सिन्धुसागरसङ्गमः ।
गोविन्दो गोपतिर्गोपः कालिन्दीप्रेमपूरकः ।।

துர்வாஸா: கபிலோ பௌம: சிந்துஸாகரஸங்கம: ।
கோவிந்தோ கோபதிர்கோப: காலிந்தீப்ரேமபூரக: ॥ 6

துர்வாஸமுநிரூபியானவன், சூரியனுக்கு ஒளியைத் தருபவன், பூமியில் அவதரிப்பவன், ஸிந்துவையும், ஸமுத்ரத்தையும் சேரும்படி செய்பவன், கோவிந்தன், வாக்குக்குப் பதியானவன், கோபாலகன், யமுனைக்கு ப்ரீதியைத் தருபவன்.

गोपस्वामी गोकुलेन्द्रो गोवर्धनवरप्रदः ।
नन्दादिगोकुलत्राता दाता दारिद्र्यभञ्जनः ।।
கோபஸ்வாமீ கோகுலேந்த்ரோ கோவர்த்தனவரப்ரத: ।
நந்தாதிகோகுலத்ராதா தாதா தாரித்ர்யபஞ்ஜன: ॥ 7

கோபாலர்களுக்கு ஸ்வாமி, கோகுலத்துக்கு அதிபதி, கோவர்த்தன மலைக்கு வரத்தைத் தந்தவன், கோகுலத்தில் வசிக்கும் நந்தர் முதலிய இடையர்களையும், பசுக்களின் கூட்டத்தையும் காப்பவன், வள்ளல் தாரித்ரியத்தைப் போக்கக்கூடியவன்.

सर्वमङ्गलदाता च सर्वकामप्रदायकः ।
आदिकर्ता महीभर्ता सर्वसागरसिन्धुजः ।।
ஸர்வமங்களதாதா ச ஸர்வகாமப்ரதாயக: ।
ஆதிகர்த்தா மஹீபர்த்தா ஸர்வஸாகரஸிந்துஜ: ॥ 8

எல்லோருக்கும் மங்கள்த்தைத் தருபவன், விரும்பிய எல்லா பயன்களையும் கொடுப்பவன், ஆதிகர்த்தா, பூமிதேவியின் கணவன், ஸமுத்ரங்களிலும், நதிகளிலும் மீனம் முதலிய அவதாரத்தைச் செய்பவன்.

गजगामी गजोद्धारी कामी कामकलानिधिः ।
कलङ्करहितश्चन्द्रो बिम्बास्यो बिम्बसत्तमः ।।
கஜகாமீ கஜோத்தாரீ காமீ காமகலாநிதி: ।
கலங்கரஹிதஶ்சந்த்ரோ பிம்பாஸ்யோ பிம்பஸத்தம: ॥ 9

யானைபோல் நடப்பவன், கஜேந்த்ரனை மடுவிலிருந்து வெளியே வரச் செய்தவன், கோபிகளைக் காமிப்பவன், காமசாஸ்த்ரத்தில் நிபுணன், களங்கமில்லாதவன், எல்லோரையும் மகிழ்விப்பவன், சந்த்ரபிம்பம் போன்ற முகத்தை உடையவன், பிம்பங்கிழ்விகளில் உயர்ந்தவன் (பிம்பம் = வட்டம்)

मालाकार कृपाकारः कोकिलस्वरभूषणः ।
रामो नीलाम्बरो देवो हली दुर्दममर्दनः ।।
மாலாகார க்ருபாகார: கோகிலஸ்வரபூஷண: ।
ராமோ நீலாம்பரோ தேவோ ஹலீ துர்தமமர்தந: ॥ 10

மாலாகாரன் என்பவனுக்கு க்ருபை செய்தவன், கோகிலம் நயில்) போன்ற குரலை அலங்காரமாக உடையவன், எல்லோருக் ;ம் ரமிக்கும்படியான உருவமுடையவன், கருப்பு வஸ்த்ரத்தை டுப்பவன், தேவன், ஹலம் என்கிற ஆயுதத்தை தரிப்பவன், யடக்கமுடியாதவர்களை அடக்குபவன்.

हस्राक्षपुरीभेत्ता महामारी विनाशनः ।
व: शिवतमो भेत्ता बलारातिप्रपूजकः ।।
ஸஹஸ்ராக்ஷபுரீபேத்தா மஹாமாரீ விநாஶந: I
வ: ஶிவதமோ பேத்தா பலாராதிப்ரபூஜக: II 11

இந்த்ரனுடைய பட்டணமான அமராவதியை உடைத்தவன், கெட்டவர்களை அழிப்பவன், ப்ரளயத்தில் ப்ரபஞ்சத்தை அழிப்ப வன், மங்களமானவன், மங்களங்களுள் உயர்ந்தவன், சத்ருக்களை டைப்பவன் அல்லது பக்தர்களுடைய ஆபத்தை அழிப்பவன், இந்த்ரனை பூஜிப்பவன்.

कुमारीवरदायी च वरेण्यो मीनकेतनः ।
रो नारायणो धीरो राधापतिरुदारधीः ।।
தமாரீவரதாயீ ச வரேண்யோ மீனகேதன: I
;ரோ நாராயணோ தீரோ ராதாபதிருதாரதீ: II 12

கோபகன்னிகைகளுக்கு வரப்ரஸாதி, பக்தர்களால் உபாய மாகவும், உபேயனாகவும் வரிக்கப்படுபவன், மீனைக் கொடியாக டையவன், பக்தர்களுக்கு இஷ்டத்தை அடைவிப்பவன் அல்லது அழிவில்லாதவன், நாராயணன், தீரன், ராதையின் கணவன், உதாரமான புத்தியை உடையவன்.

ीपतिः श्रीनिधिः श्रीमान् मापतिः प्रतिराजहा ।
न्दापतिः कुलग्रामी धामी ब्रह्म सनातनः ।।
ஸ்ரீபதி: ஶ்ரீநிதி: ஶ்ரீமாந் மாபதி: ப்ரதிராஜஹா I
ருந்தாபதி: குலக்ராமீ தாமீ ப்ரஹ்ம ஸநாதந: II 13

லக்ஷ்மீபதி, ஸம்பத்துக்கு நிதியானவன், பிராட்டியை விட்டுப் பிரியாதவன், சத்ருவான அரசர்களை ஸம்ஹரிப்பவன்,

ராதாபதி, கோகுலக்ராமஸ்வாமீ, தேஜஸ்வீ, ஸ்வரூபத்தாலும், குணத் தாலும் உயர்ந்தவன், எப்பொழுதும் இருப்பவன்.

रेवतीरमणो रामः प्रियश्चञ्चललोचनः ।
रामायणशरीरोऽयं रामो रामः श्रियः पतिः ॥
ரேவதீரமணோ ராம: ப்ரியஶ்சஞ்சலலோசன: ।
ராமாயணசரீரோऽயம் ராமோ ராம: ஶ்ரிய: பதி: ॥ 14

ரேவதீ பதியான பலராமஸ்வரூபன், ராமாவதாரம் செய்தவன், எல்லோருக்கும் ப்ரியமானவன், இமைக்கும் அழகிய கண்களை உடையவன், ராமாயணத்தில் கூறப்பட்டவன், யோகிகள் ரமிப்பதற்கு இலக்கானவன், அழகானவன், லக்ஷ்மீபதி.

शर्वरः शर्वरी शर्वः सर्वत्र शुभदायकः ।
राधाराधयिताराधी राधाचित्तप्रमोदकः ॥
சர்வர: சர்வரீ சர்வ: ஸர்வத்ர ஶுபதாயக: ।
ராதாராதயிதாராதீ ராதாசித்தப்ரமோதக: ॥ 15

பாகவதர்களுக்கு சத்ருவானவர்களை ஹிம்ஸிப்பவன், பக்தி யில்லாதவர்களுக்கு ராத்ரி மாதிரி ப்ரகாசிக்காதவன், ப்ரளய காலத்தில் ஜகத்தை ஸம்ஹரிப்பவன், பக்தர்களுக்கு எல்லா காலத்திலும், எல்லா இடத்திலும் சுபத்தைத் தருபவன், ராதையை ஆனந்திப்பவன், பக்தர்களுடைய சித்தத்தை ஸந்தோஷிப்பவன், ராதையினுடைய சித்தத்தை ஸந்தோஷிக்கும்படி செய்பவன்.

राधारतिसुखोपेतः राधामोहनतत्परः ।
राधावशीकरो राधाहृदयाम्भोजषट्पदः ॥
ராதாரதிஸுகோபேத: ராதாமோஹநதத்பர: ।
ராதாவஶீகரோ ராதாஹ்ருதயாம்போஜஷட்பத: ॥ 16

ராதையைப் புணர்வதால் ஏற்பட்ட ஸுகத்தை உடையவன், ராதைக்கு ஸுகத்தைத் தருவதில் ஆஸக்தியுடையவன், ராதையைத் தன்வசமாக்கிக் கொள்பவன், ராதையினுடைய தாமரைப் போன்ற ஹ்ருதயத்துக்கு வண்டு போன்றவன்.

राधालिङ्गनसंमोहः राधानर्तनकौतुकः ।
राधासञ्जातसंप्रीतो राधाकाम्यफलप्रदः ।।
ராதாலிங்கனஸம்மோஹ: ராதாநர்தனகௌதுக: ।
ராதாஸஞ்ஜாதஸம்ப்ரீதோ ராதாகாம்யபலப்ரத: ॥ 17

ராதையைக் கட்டிக்கொள்வதில் ஆர்வமுடையவன், ராதையின் நாட்டியத்தை ரஸிப்பவன், ராதையினிடத்தில் ப்ரீதியுடையவன். ராதைக்கு வேண்டிய பலத்தைக் கொடுப்பவன்.

बृन्दापतिः कोशनिधिः कोकशोकविनाशनः ।
चन्द्रापतिः चन्द्रपतिः चण्डकोदण्डभञ्जनः ।।
ப்ருந்தாபதி: கோசநிதி: கோகசோகவிநாஶன: ।
சந்த்ராபதி: சந்த்ரபதி: சண்டகோதண்டபஞ்ஜந: ॥ 18

ப்ருந்தாவனத்துக்குத் தலைவன், யோகிகளுடைய ஹ்ருதயத்தில் வசிப்பவன், சக்ரவாக பக்ஷிகளுடைய சோகத்தைப் போக்கடிப்பவன், சந்த்ரா - லக்ஷ்மிக்கு பதி - சந்திரனுக்கு அதிபதி, பயங்கரமான வில்லை ஒடித்தவன்.

रामो दाशरथी रामः भृगुवंशसमुद्भवः ।
आत्मारामो जितक्रोधो मोहो मोहान्धभञ्जनः ।।
ராமோ தாஶரதீ ராம: ப்ருகுவம்சஸமுத்பவ: ।
ஆத்மாராமோ ஜிதக்ரோதோ மோஹோ மோஹாந்தபஞ்ஜந: ॥ 19

பலராமஸ்வரூபன், தாசரதிராமஸ்வரூபன், ப்ருகுவம்சத்தில் தோன்றிய பரசுராமஸ்வரூபன், தன்னையே ஸுககரமான தோட்டமாக நினைப்பவன், கோபத்தை வென்றவன், அயலார் மோஹிக்கும்படியான ரூபத்தை உடையவன், அஜ்ஞானத்தால் இருண்ட அரக்கர்களையும் அழித்தவன்.

वृषभानुभवो भावः काश्यपिः करुणानिधिः ।
कोलाहलो हली हाली हेली हलधरप्रियः ।।
வ்ருஷபாநுபவோ பாவ: காஶ்யபி: கருணாநிதி: ।
கோலாஹலோ ஹலீ ஹாலீ ஹேலீ ஹலதரப்ரிய: ॥ 20

எருதுபோல் பலசாலியான பலராமனுடைய தம்பி. அவரவர் செய்த கர்மபலத்தை அனுபவிக்கும்படி செய்பவன், கச்யபருடைய புத்ரரான வாமனரூபி, தயாநிதி, தன்னை பந்துவாக எண்ணும்படி பக்தர்களை வேண்டுபவன், கலப்பையை ஆயுதமாக உடையவன், ஸந்துஷ்டன், ச்ருங்கார சேஷ்டையுடையவன், பலராமனுடைய ப்ரீதிக்கு பாத்ரபூதன்.

राधामुखाब्जमार्ताण्डः भास्करो रविजा विधुः ।
विधिर्विधाता वरुणो वारुणो वारुणीप्रियः ।।
ராதாமுகாப்ஜமார்தாண்ட: பாஸ்கரோ ரவிஜா விது: ।
விதிர்விதாதா வருணோ வாருணோ வாருணீப்ரிய: ॥ 21

ராதையினுடைய முகமாகிற தாமரையை மலரும்படிச் செய்யும் சூரியன், ஸூரியன் முதலிய ப்ரகாசங்களுக்கு ப்ரகாச சக்தியைக் கொடுப்பவன், ஸூர்யவம்சத்தில் உதித்தவன், விஷ்ணு, ஹிதானு மாஸகன், ஸ்ருஷ்டி கர்த்தா, ஸர்வ வ்யாபீ, வஸிஷ்டஸ்வரூபன், தூர்வாதலம் போன்ற காந்தியை உடைய லக்ஷ்மிக்குப் பதி.

रोहिणीहृदयानन्दो वसुदेवात्मजो बली ।
नीलाम्बरो रौहिणेयो जरासन्धवधोऽमलः ।।
ரோஹிணீஹ்ருதயாநந்தோ வஸுதேவாத்மஜோ பலீ ।
நீலாம்பரோ ரௌஹிணேயோ ஜராஸந்தவதோऽமல: ॥ 22

ரோஹிணிக்கு ஆநந்தத்தைத் தருபவன், வசுதேவருடைய புத்ரன், பலமுடையவன், கருப்பு வஸ்த்ரத்தை உடுப்பவன், ரோஹிணியின் புத்ரன், ஜராஸந்தனைக் கொன்றவன், குற்றமில்லாதவன்.

नागो नवाम्भो विरुदो वीरहा वरदो बली ।
गोपथो विजयी विद्वान् शिपिविष्टः सनातनः ।।
நாகோ நவாம்போ விருதோ வீரஹா வரதோ பலீ ।
கோபதோ விஜயீ வித்வான் சிபிவிஷ்ட: ஸநாதந: ॥ 23

ஆதிசேஷனைப் படுக்கையாக உடையவன், நூதன மேகம் போன்றவன், சோகமிராதவன், வீரர்களைக் கொன்றவன், வரப்ரதாதா, பலமுடையவன், பசுக்கள் செல்லும் வழியில் செல்பவன், விஜய

முடையவன், வித்வான், பூர்ணப்ரகாசன், எப்பொழுதும் இருப்பவன்.

परशुरामवचोग्राही वरग्राही शृगालहा ।
दमघोषोपदेष्टा च रथग्राही सुदर्शनः ।।
பரசுராமவசோக்ராஹீ வரக்ராஹீ ஶ்ருகாலஹா ।
தமகோஷோபதேஷ்டா ச ரதக்ராஹீ ஸுதர்சந: ॥ 24

பரசுராமருடைய சொற்படி நடந்தவர், பக்தர்களை இஷ்டத்தைக் கேட்கும்படி தூண்டுபவர், ச்ருகாலன் என்கிற அசுரனைக் கொன்றவர், சிசுபாலனுடைய தகப்பனாருக்கு உபதேசம் பண்ணினவர், ராமாவதாரத்தில் இந்திரனால் அனுப்பப்பட்ட தேரை வாங்கிக் கொண்டவர், பார்ப்பதற்கு அழகாக இருப்பவர்.

वीरपत्नीयश स्त्राता जराव्याधिविघातकः ।
द्वारकावासतत्त्वज्ञः हुताशनवरप्रदः ।।
வீரபத்நீயசஸ்த்ராதா ஜராவ்யாதிவிகாதக: ।
த்வாரகாவாஸதத்த்வஜ்ஞ: ஹுதாஶநவரப்ரத: ॥ 25

வீரபத்னியான த்ரௌபதியின் புகழைக் காப்பாற்றியவர், கிழத்தனம், வியாதி இவைகளைப் போக்கடிப்பவர், த்வாரகையில் வசிப்பதின் உண்மையை உணர்ந்தவர், அக்னிக்கு வரத்தைக் கொடுப்பவர் அதாவது கொளுத்தும் சக்தியைக் கொடுத்தவர்.

यमुनावेगसंहारी नीलाम्वरधरः प्रभुः ।
विभुः शरासनो धन्वी गणेशो गणनायकः ।।
யமுனாவேகஸம்ஹாரீ நீலாம்பரதர: ப்ரபு: ।
விபு: சராஸநோ தந்வீ கணேசோ கணநாயக: ॥ 26

யமுனையின் வேகத்தை அடக்குபவர், நீல வஸ்த்ரத்தை தரிப்பவர், ஸமர்த்தர், ஸர்வவ்யாபீ, பாணத்தை சத்ருக்கள் மேல் போடுபவர், ஶார்ங்கமென்னும் வில்லையுடையவர், பரிவார கணங்களை நியமிப்பவர், தடங்கல் கூட்டத்தைப் போக்கடிப்பவர்.

लक्ष्मणो लक्षणो लक्ष्यो रक्षोवंशविनाशनः ।
वामनो वामनीभूतोऽवामनो वामनारुहः ।।

லக்ஷ்மணோ லக்ஷணோ லக்ஷ்யோ ரக்ஷோவம்சவிநாசன: ।
வாமனோ வாமநீபூதோऽவாமனோ வாமனாருஹ: ॥ 27

லக்ஷ்மீ ஸம்பன்னர், எல்லாவற்றையும் பார்ப்பவர், யோகிகளால் பார்க்கத் தகுந்தவர், ராக்ஷஸவம்சத்தை அழித்தவர், வாமன ரூபியாய் பலிச்சக்ரவர்த்தியினிடம் யாசித்தவர், ஸுகத்தைத் தருபவர், பெரிய சரீரம் உள்ளவர், வாமனன் என்கிற யானையின் மேல் ஏறினவர்.

यशोदानन्दनः कर्ता यमलार्जुनमुक्तिदः ।
उलूखली महामानी दामबद्धाह्वयी शमी ।।
யசோதாநந்தந: கர்த்தா யமலார்ஜுனமுக்தித: ।
உலூகலீ மஹாமானீ தாமபத்தாஹ்வயீ சமீ ॥ 28

யசோதைக்கு ஆநந்தத்தைத் தரும் பிள்ளை, ஜகத்தை ஸ்ருஷ்டிப்பவன், இரட்டையான அர்ஜுன மரங்களுக்கு மோக்ஷத்தைத் தந்தவன், உரலில் கட்டுண்டவன், பக்தர்களால் துதித்ததால் பெருமைபெற்றவன், கயிற்றினால் கட்டப்பட்டபடியால் தாமபத்தன் என்கிற பெயரை உடையவன், இந்திரியங்களை அடக்கியவன்.

भक्तानुकारी भगवान् केशवो बलधारकः ।
केशिहा मधुहा मोही वृषासुरविघातकः ।।
பக்தாநுகாரீ பகவான் கேசவோ பலதாரக: ।
கேசிஹா மதுஹா மோஹீ வ்ருஷாஸுரவிகாதக: ॥ 29

பக்தர்களுடைய ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டவன், ஆறு குணங்களை உடையபடியால் பகவான் எனப்படுபவன், ப்ரஹ்மாவுக்கும், சிவனுக்கும் ஈசனானபடியால் கேசவன் எனப்படுபவன், பௌருஷத்தைத் தரிப்பவன், கேசி என்கிற அசுரனைக் கொன்றவன், மது என்கிற அசுரனைக் கொன்றவன், பக்தர்களிடத்தில் மோஹத்தை உடையவன், எருதுருபியான அஸுரனைக் கொன்றவன்.

अघासुरविनाशी च पूतनामोक्षदायकः ।
कुब्जाविनोदी भगवान् कंसमृत्युमहामखी ।।

அகாஸுரவிநாசீ ச பூதநாமோக்ஷதாயக: ।
குப்ஜாவிநோதீ பகவாந் கம்ஸம்ருத்யுமஹாமகீ ॥ 30

அகாசுரனைக் கொன்றவன், பூதனைக்கு மோக்ஷத்தைத் தந்தவன், கூனியோடு விளையாடி அவளை நிமிரும்படி பண்ணியவன், பகவான் கம்ஸனைக் கொல்லுவதாகிய பெரிய யாகத்தைச் செய்தவன்.

अश्वमेधो वाजपेयो गोमेधो नरमेधवान् ।
कन्दर्पकोटिलावण्यश्चन्द्रकोटिसुशीतलः ।।
அஶ்வமேதோ வாஜபேயோ கோமேதோ நரமேதவான் ।
கந்தர்பகோடிலாவண்யஶ்சந்த்ரகோடிஸுசீதல: ॥ 31

அச்வமேதம், வாஜபேயம், கோமேதம், நரமேதம் முதலிய யாகங்களால் ஆராதிக்கப்படுபவன், கோடிமன்மதர்களுடைய அழகை உடையவன், கோடி சந்த்ரன்களின் குளிர்ச்சியை உடையவன்.

रविकोटिप्रतीकाशो वायुकोटिमहाबलः ।
ब्रह्मा ब्रह्माण्डकर्ता च कमलावाञ्छितप्रदः ।।
ரவிகோடிப்ரதீகாசோ வாயுகோடிமஹாபல: ।
ப்ரஹ்மா ப்ரஹ்மாண்டகர்தா ச கமலாவாஞ்சிதப்ரத: ॥ 32

கோடிஸூர்யர்களுக்கு ஸமமானவன், கோடி வாயுக்களின் பலத்தை உடையவன், ஹிரண்யகர்பரூபியாய் ப்ரஹ்மாண்டத்தை ஸ்ருஷ்டிப்பவன், லக்ஷ்மிக்கு இஷ்டமானதைத் தருபவன்.

कमला कमलाक्षश्च कमलामुखलोलुपः ।
कमलाव्रतधारी च कमलाभः पुरन्दरः ।।
கமலா கமலாக்ஷஶ்ச கமலாமுகலோலுப: ।
கமலாவ்ரததாரீ ச கமலாப: புரந்தர: ॥ 33

லக்ஷ்மீபதியானவன், தாமரைமலர் போன்ற கண்களை உடையவன், லக்ஷ்மியினுடைய முகத்தில் அதிக ஆசையை உடையவன், லக்ஷ்மியினுடைய வ்ரதத்தை உடையவன் அதாவது லக்ஷ்மி,

நாராயணன் தவிர வேறிடத்தில் ப்ரீதியிராததான வ்ரதத்தை உடையவள், அதைப்போல் நாராயணனும் லக்ஷ்மி தவிர வேறிடத்தில் ப்ரீதியிராததான வ்ரதத்தை உடையவன், தாமரை மலரைப் போல் ப்ரகாசிப்பவன், அசுரர்களைப் பிளப்பவன்.

सौभाग्याधिकचित्तोऽयं महामायी महोत्कटः ।
तारकारिः सुरत्राता मारीचक्षोभकारकः ।।
ஸௌபாக்யாதிகசித்தோऽயம் மஹாமாயீ மஹோத்கட: ।
தாரகாரி: ஸுரத்ராதா மாரீசக்ஷோபகாரக: ॥ 34

அதிகமான ஸௌபாக்யத்தையுடைய சித்தத்தை உடையவன், தன்னிடம் பக்தியில்லாதவர்களுக்கு ஆத்மஸ்வரூபம் தெரியாதபடி மறைக்கும் பெரிய மாயையை உடையவன், சத்ருக்களுக்கு பயங்கரமானவன், தாரகாசுரனை அழித்தவன், தேவதைகளை ரக்ஷிப்பவன், மாரீசனுக்கு பயத்தை உண்டுபண்ணியவன்.

विश्वामित्रप्रियो दान्तो रामो राजीवलोचनः ।
लङ्काधिपकुलध्वंसी विभीषणवरप्रदः ।।
விஶ்வாமித்ரப்ரியோ தாந்தோ ராமோ ராஜீவலோசந: ।
லங்காதிபகுலத்வம்ஸீ விபீஷணவரப்ரத: ॥ 35

விச்வாமித்ரமுனிவருடைய ப்ரீதிக்கு பாத்ரமானவன், இந்த்ரியங்களை அடக்கியவன், குணங்களால் எல்லோரையும் வசீகரித்தவன், தாமரை மலர் போன்ற கண்களை உடையவன், ராவணனுடைய குலத்தை அழித்தவன், விபீஷணனுக்கு வரத்தை அளித்தவன்.

सीतानन्दकरो रामो वीरो वारिधिबन्धनः ।
खरदूषणसंहारी साकेतपुरवासवान् ।।
ஸீதாநந்தகரோ ராமோ வீரோவாரிதி பந்தன: ।
கரதூஷணஸம்ஹாரீ ஸாகேதபுரவாஸவான் ॥ 36

ஸீதைக்கு ஆநந்தத்தைக் கொடுப்பவன், எல்லோருக்கும் ப்ரியமானவன், வீரன், ஸமுத்ரத்தில் ஸேதுவைக் கட்டினவன், கரன், தூஷணன் இவர்களை ஸம்ஹரித்தவன், அயோத்யா பட்டணத்தில் வசித்தவன்.

चन्द्रावलीपतिः कूलः केशिकंसवधोऽमलः ।
माधवो मधुहा माध्वी माध्वीको माधवो विभुः ।।
சந்த்ராவலீபதி: கூல: கேசிகம்ஸவதோऽமல: ।
மாதவோ மதுஹா மாத்வீ மாத்வீகோ மாதவோ விபு: ॥ 37

சந்த்ராவளீ என்கிற கோபிகைக்குக் கணவன், ஸம்ஸார ஸமுத்ரத்துக்கு அக்கரையில் உள்ளவன், கேசி கம்ஸன் என்கிற அசுரர்களை அழித்தவன், அழுக்கிறாதவன் அதாவது குற்றமற்றவன், மாதவன் அதாவது ஸ்ரீய:பதி, மது என்கிற அசுரனைக் கொன்றவன், தேனைப் போல் மிகவும் போக்யமானவன், ஸர்வவ்யாபீ.

मुञ्जाटवीगाहमानः धेनुकारिर्धरात्मजः ।
वंशीवटविहारी च गोवर्धनवनाश्रयः ।।
முஞ்ஜாவடீகாஹமான: தேனுகாரிர்தராத்மஜ: ।
வம்ஶீவடவிஹாரீ ச கோவர்தனவனாச்ரய: ॥ 38

முஞ்ஜா என்கிற புல்கள் நிறைந்த காட்டில் ப்ரவேசிப்பவன், தேனுகன் என்கிற அசுரனுக்கு சத்ருவானவன், பூமிஸுதன் அதாவது பூலோகத்தில் அவதரித்தவன், மூங்கில் மரங்கள் நிறைந்த ப்ரதேசத்தில் விளையாடுபவன், கோவர்த்தன பர்வதப்ராந்தத்தில் வசிப்பவன்.

तथा तालवनोद्देशी भाण्डीरवनशङ्खहा ।
तृणावर्तकृपाकारी वृषभानुसुतापतिः ।।
ததா தாலவனோத்தேஶீ பாண்டீரவன சங்கஹா ।
த்ருணாவர்த்தக்ருபாகாரீ வ்ருஷபானுஸுதாபதி: ॥ 39

பனைமரங்கள் நிறைந்த காட்டில் விளையாடுபவன், பாண்டீரம் என்கிற பெயருள்ள காட்டில் ஸஞ்சரிக்கும் சங்கன் என்கிற அசுரனைக் கொன்றவன், கம்ஸனால் ஏவப்பட்ட த்ருணாவர்த்தன் என்கிற அசுரனை ஸம்ஹரித்து அவனுக்கு மோக்ஷத்தை க்ருபையால் கொடுத்தவன், வ்ருஷபானுவின் பெண்ணான ராதைக்கு பர்த்தா, ராதையின் தகப்பனாருக்கு வ்ருஷபானு என்று பெயர்.

राधाप्राणसमो राधावदनाब्जमधुव्रतः ।
गोपीरञ्जनदैवज्ञः लीलाकमलपूजितः ।।
ராதாப்ராணஸமோ ராதாவதனாப்ஜமதுவ்ரத: ।
கோபீரஞ்ஜன தைவஜ்ஞ: லீலாகமலபூஜித: ॥ 40

ராதைக்கு ப்ராணன் போன்றவன், ராதையினுடைய முகமாகிய தாமரை புஷ்பத்தில் தேனைப் பருகுபவன், கோபிகைகளை மகிழ்விப்பதற்கு வேண்டிய விதிகளை அறிந்தவன், தாம்ரைப் பூவினால் அநாயாஸமாகப் பூஜிக்கத் தகுந்தவன்.

क्रीडाकमलसन्दोहः गोपिकाप्रीतिरञ्जनः ।
रञ्जको रञ्जनो रङ्गो रङ्गी रङ्गमहीरुहः ।।
க்ரீடாகமலஸந்தோஹ: கோபிகாப்ரீதிரஞ்ஜன: ।
ரஞ்ஜகோ ரஞ்ஜநோ ரங்கோ ரங்கீரங்கமஹீருஹ: ॥ 41

விளையாட்டுக்கு வேண்டிய தாமரைப் பூக்களை உடையவன், கோபிகைகளுடைய ப்ரீதிக்குக் காரணபூதன் அதாவது கோபிகைகளுடைய ப்ரீதியை விரும்புபவன், பக்தர்களுக்கு ஸந்தோஷத்தைத் தருபவன், பக்தர்களுடைய ப்ரீதிக்கு பாத்ரமானவன், நாட்டியத்துக்கு மேடைபோன்றவன், நாட்டியமாடுபவன், நாட்டியமாடுவதற்காக மேடையில் ஏறுபவன்.

कामः कामारिभक्तोऽयं पुराणपुरुषः कविः ।
नारदो देवलो भीमो बालो बालमुखाम्बुजः ।।
காம: காமாரி பக்தோயம் புராணபுருஷ: கவி: ।
நாரதோ தேவலோ பீமோ பாலோ பாலமுகாம்புஜ: ॥ 42

எல்லோராலும் விரும்பப்படுபவன், மன்மதசத்ருவான ருத்ரனுக்கு பக்தன், அல்லது ருத்ரனை பக்தனாக உடையவன், அநாதிபுருஷன், இந்த்ரியங்களுக்கு எட்டாத வஸ்துக்களைப் பார்ப்பதில் சக்தியுடையவன், நாரதமஹர்ஷிஸ்வரூபீ, அல்லது மனுஷ்யர்களுடைய அஜ்ஞானத்தைப் போக்குபவன், தேவர்களைக் காப்பவன், சாஸ்த்ரமர்யாதையை மீறுபவர்களுக்குப் பீதியை உண்டுபண்ணுபவன், பாலனான ஸ்ரீக்ருஷ்ணன், குழந்தையுடைய தாமரை முகம் போன்ற முகத்தை உடையவன்.

अम्बुजो ब्रह्मसाक्षी च योगी दत्तवरो मुनिः ।
ऋषभः पर्वतो ग्रामो नदीपवनवल्लभः ।।
அம்புஜோ ப்ரஹ்மஸாக்ஷீ ச யோகீதத்தவரோமுநி: ।
ரிஷப: பர்வதோக்ராமோ நதீபவநவல்லப: ॥ 43

ஜலத்தில் மீனாயும், ஆமையாயும் அவதரிப்பவன், பரமாத்மாவாக இருந்துகொண்டு எல்லாவற்றையும் ஸாக்ஷாத்கரிப்பவன், ஜகத் ரக்ஷண சிந்தையையுடையவன், பக்தர்களுக்கு வரத்தைத் தருபவன், பக்தர்களுடைய ஹிதத்தைச் சிந்திப்பவன், பக்தர்களுடைய கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக அவர்களிருக்குமிடத்துக்குச்செல்பவன், மலைபோல் அசையாதவன், குணஸமூஹத்தை உடையவன், யமுநாநதியின் ஸமீபத்திலுள்ள தோட்டத்துக்கு ஸ்வாமீ.

पद्मनाभः सुरज्येष्ठी ब्रह्मा रुद्रोऽहिभूषितः ।
गणानां त्राणकर्ता च गणेशो ग्रहिलो ग्रही ।।
பத்மநாப: ஸுரஜ்யேஷ்டீ ப்ரஹ்மாருத்ரோऽஹிபூஷித: ।
கணாநாம் த்ராணகர்த்தா ச கணேசோ க்ரஹிலோ க்ரஹீ ॥ 44

நாபியில் பத்மத்தை உடையவன், தேவதைகளுள் உயர்ந்தவன், நான்முகனுக்கு அந்தர்யாமீ, ருத்ரனுக்கு அந்தர்யாமீ, அல்லது ஆச்ரிதர்களுடைய கஷ்டத்தை ஓடச்செய்பவன், காளியன் என்கிற ஸர்ப்பத்தின் தலையில் தன்னுடைய திருவடியைப் பதித்தவன், பசுக்களின் கூட்டத்துக்கும், கோபாலர்களின் கூட்டத்துக்கும் ரக்ஷகன், குமுதகுமுதாக்ஷாதி பரிவாரங்களுக்கு நியமனம் செய்பவன், ஸர்வஜகத்தையும் வசீகரிப்பவன், பக்தியினால் ஸமர்ப்பிக்கப்படும் பத்ரபுஷ்பாதிகளை ப்ரீதியுடன் க்ரஹிப்பவன்.

गणाश्रयो गणाध्यक्षः क्रोडीकृतजगत्त्रयः ।
यादवेन्द्रो द्वारकेन्द्रो मथुरावल्लभो धुरी ।।
கணாச்ரயோ கணாத்யக்ஷ: க்ரோடீக்ருதஜகத்த்ரய: ।
யாதவேந்த்ரோ த்வாரகேந்த்ரோ மதுராவல்லபோ துரீ ॥ 45

நித்யஸூரிக் கூட்டத்துக்கு ஆச்ரயமானவன், தேவதைகளின் கூட்டத்துக்குத் தலைவன், மூன்று உலகங்களையும் தன்வசமாக்கிக்

கொண்டவன், யதுகுலத்துதித்தவர்களுள் உயர்ந்தவன், த்வாரகா பட்டணத்துக்கு அதிபதி, மதுராநகரத்துக்கு அதிபதி, புவனபரத்தை அல்லது ரக்ஷணபரத்தை ஏற்றுக்கொண்டவன்.

भ्रमरः कुन्तली कुन्तीसुतरक्षो महामखी ।
यमुनावरदाता च काश्यपस्य वरप्रदः ॥
ப்ரமர: குந்தலீ குந்தீஸுதரக்ஷோ மஹாமகீ ।
யமுநாவரதாதா ச காச்யபஸ்ய வரப்ரத: ॥ 46

வண்டுபோல் பாகவதர்களுடைய ஹ்ருதய கமலத்தில் வசிப்பவன், அழகிய கேசபாசத்தை உடையவன், குந்தியின் புத்ரனான அர்ஜுனனுக்கு ரக்ஷகன், உயர்ந்த யாகங்களாலே ஆராதிக்கப்படுபவன், யமுனையில் விளையாடி அந்நதிக்கு மகிழ்ச்சியைத் தந்தவன், காச்யபர் என்பவருக்கு வரம் கொடுத்து அவருடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி அவருக்கு வாமனன் என்கிற புத்ரனாகப் பிறந்தவன்.

शङ्खचूडवधोद्दामो गोपीरक्षणतत्परः ।
पाञ्चजन्यकरो रामी त्रिरामी वनजो जयः ॥
சங்கசூடவதோத்தாமோ கோபீரக்ஷணதத்பர: ।
பாஞ்சஜன்யகரோராமீ த்ரிராமீவனஜோஜய: ॥ 47

சங்கன், சூடன் என்கிற அசுரர்களை வதம் செய்தவன், கோபிகைகளை ரக்ஷிப்பதில் ஆர்வமுடையவன், பாஞ்சஜன்யம் என்கிற சங்கத்தை ஏந்தியவன், அழகிய பெண்களை வசீகரித்தவன், பரசுராமன், தாசரதிராமன், பலராமன் என்கிற மூன்று ராமாவதாரம் செய்தவன், ஜலத்தில் மீன் முதலிய ஜந்துவாய் அவதரித்தவன், ஜயசீலன்.

फाल्गुनः फाल्गुनसखो विराधवधकारकः ।
रुक्मिणीप्राणनाथश्च सत्यभामाप्रियङ्करः ॥
பால்குந: பால்குநஸகோ விராதவதகாரக: ।
ருக்மிணீப்ராணநாதச்ச ஸத்யபாமாப்ரியங்கர: ॥ 48

பாண்டவர்களுள் அர்ஜுனனானவன், அர்ஜுனனுடைய தோழன், விராதன் என்கிற ராக்ஷஸனை ஸம்ஹரித்தவன், ருக்மிணீ தேவிக்கு ப்ராணநாதன், ஸத்யபாமைக்கு ப்ரீதியை உண்டுபண்ணி னவன்.

कल्पवृक्षो महावृक्षः दानवृक्षो महाफलः ।
अङ्कुशो भूसुरो भावो भ्रामको भामको हरिः ।।
கல்பவ்ருக்ஷோ மஹாவ்ருக்ஷ: தானவ்ருக்ஷோ மஹாபல: ।
அங்குசோபூஸுரோ பாவோ ப்ராமகோபாமகோஹரி: ॥ 49

கல்பவ்ருக்ஷம்போல் விரும்பியதைத் தருபவன், ஸம்ஸார தாபத்தைப் போக்குகிற பெரிய வ்ருக்ஷம் போன்றவன், அபேக்ஷி தத்தைக் கொடுக்கக்கூடிய வ்ருக்ஷம் போன்றவன், சத்ருக்களுக்கு அங்குசம் போன்றவன், (யானையை அடக்கும் கருவி) ப்ராஹ்ம ணஸ்வரூபன், அநேகவிதமாக அவதரிப்பவன், பக்தியிராதவர் களுக்கு விபரீத ஜ்ஞானத்தை உண்டுபண்ணுபவன், பகவத் பக்தர்களுக்கு அபராதம் செய்தவர்கள் விஷயத்தில் கோபமுடைய வன், பாபங்களைப் போக்கடிப்பவன்.

सरलः शाश्वतो वीरो यदुवंशी शिवात्मकः ।
प्रद्युम्नो बलकर्ता च प्रहर्ता दैत्यहा प्रभुः ।।
ஸரள: சாச்வதோ வீரோ யதுவம்சீ சிவாத்மக: ।
ப்ரத்யும்நோ பலகர்த்தா ச ப்ரஹர்தா தைத்யஹா ப்ரபு: ॥ 50

எல்லோரிடமும் ஸஹஜமாகப் பழகும் ஸ்வபாவமுடையவன், எப்பொழுதும் இருப்பவன், பராக்ரமசாலி, யதுவம்சத்தில் தோன்றி யவன், ருத்ரஸ்வரூபீ, உயர்ந்த ஐச்வர்யமுடையவன், ஆத்மஜ்ஞான ஸாதனமாகிய பலத்தைக் கொடுப்பவன், சத்ருக்களை அழிப்பவன், அசுரர்களை ஸம்ஹாரம் பண்ணியவன், ஸர்வஸ்வாமியானவன்.

महाधनी महावीरो वनमालाविभूषणः ।
तुलसीदामशोभाढ्यो जालन्धरविनाशनः ।।
மஹாதனீமஹாவீரோ வநமாலாவிபூஷண: ।
துளஸீதாமசோபாட்யோ ஜாலந்தரவிநாசந: ॥ 51

யாசிப்பவர்களுக்குக் கொடுக்குமளவு தனமுடையவன், மஹா பராக்ரமமுடையவன், வைஜயந்தீ என்கிற மாலையை அணிபவன், துளசிமாலையால் ப்ரகாசிப்பவன், ஜாலந்தரன் என்கிற அசுரனை ஸம்ஹரித்தவன் (ரத்னம், தங்கம், வஜ்ரம், வைடூர்யம், முத்து இவைகளால் ஆன மாலை வைஜயந்தீ எனப்படும்).

शूरः सूर्यो मृतण्डश्च भास्करो विश्वपूजितः ।
रविस्तमोहा वह्निश्च बाडवो वडवानलः ।।

சூர: ஸூர்யோ ம்ருதண்டச்ச பாஸ்கரோ விச்வபூஜித: ।
ரவிஸ்தமோஹா வஹ்நிச்ச பாடபோ படபாநல: ॥ 52

பராக்ரமசாலி, ஸூர்யனைப்போல் ப்ரகாசிப்பவன், ஸூர்யஸ்வரூபன், எல்லோராலும் பூஜிக்கப்படுபவன், முக்தர்களால் அடையத்தகுந்தவன், அஜ்ஞானமாகிற இருளைப்போக்குபவன், உலகைத்தரிப்பவன், விப்ரரூபன், படவாக்னிஸ்வரூபன்.

दैत्यदर्पविनाशी च गरुडो गरुडाग्रजः ।
गोपीनाथो महीनाथो बृन्दानाथोऽविरोधकः ।।

தைத்யதர்பவிநாசீச கருடோ கருடாக்ரஜ: ।
கோபீநாதோ மஹீநாதோ ப்ருந்தாநாதோऽவிரோதக: ॥ 53

அசுரர்களுடைய கர்வத்தை அழிப்பவன், கருடபக்ஷிஸ்வரூபன், கருடனுடைய தமையனான அருணன், கோபிகளுக்குப் பதி, பூமிதேவியின் நாயகன், ப்ருந்தா என்பவளின் பர்த்தா, ஸ்வபாவத்தால் யாருடனும் விரோதமிராதவன்.

प्रपञ्ची पञ्चरूपश्च लतागुल्मश्च गोपतिः ।
गङ्गा च यमुनारूपो गोदा वेत्रवती तथा ।।
कावेरी नर्मदा तापी गण्डकी सरयूस्तथा ।
राजसस्तामसस्सत्त्वी सर्वाङ्गी सर्वलोचनः ।।

ப்ரபஞ்சீ பஞ்சரூபச்ச லதாகுல்மச்ச கோபதி: ।
கங்கா ச யமுநாரூபோ கோதாவேகவதீததா ॥ 54
காவேரீ நர்மதா தாப்தீ கண்டகீஸரயூஸ்ததா ।
ராஜஸஸ்தாமஸ: ஸத்வீ ஸர்வாங்கீ ஸர்வலோசந: ॥ 55

ப்ரபஞ்சத்தை சரீரமாக உடையவன், பரம், வ்யூஹம், விபவம், ஹார்தம், அர்ச்சா என்கிற ஐந்து திவ்ய மங்கள விக்ரஹத்தை உடையவன், கொடி, புதர் நிரம்பிய ப்ரதேசங்களில் விஹரிப்பவன், வாக்குக்கு அதிபதி, கங்கை, யமுனை, கோதாவரி முதலிய நதிகள் ஸ்வரூபன், மேலும் வேத்ரவதி, காவேரி, நர்மதா, தாப்தீ, கண்டகீ, ஸரயூ முதலிய நதிகளின் ஸ்வரூபன், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற முக்குணங்களை நியமிப்பவன், எல்லா தேவதைகளையும் அங்கமாக உடையவன், எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாகக் காண்பவன்.

सुधामयोऽमृतमयो योगिनीवल्लभः शिवः ।
बुद्धो बुद्धिमतां श्रेष्ठो विष्णुर्जिष्णुः शचीपतिः ॥
ஸுதாமயோऽம்ருதமயோ யோகிநீவல்லப: சிவ: ।
புத்தோ புத்திமதாம் ச்ரேஷ்டோ விஷ்ணுர் ஜிஷ்ணு: சசீபதி: ॥ 56

அம்ருதஸ்வரூபன், வ்ரதம் பண்ணிய கோபிகைகளுக்கு ப்ரியமானவன், மங்களகரன், புத்தராக அவதரித்தவன், புத்திமான்களுள் உயர்ந்தவன், ஸர்வவ்யாபகன், ஜயசீலன், இந்த்ராணியின் பதியான இந்த்ரனுக்கு அந்தர்யாமீ.

वंशी वंशधरो लोकः विलोको मोहनाशनः ।
रवरावो रवो रावो बलो बालबलाहकः ॥
வம்சீவம்சதரோ லோக: விலோகோ மோஹநாசந: ।
ரவராவோ ரவோ ராவோ பலோ பாலபலாஹக: ॥ 57

ஸர்வஜந்துக்களையும் தன்னுடைய வசமாகக் கொண்டவன், புல்லாங்குழலை தரிப்பவன், யோகிகளால் பார்க்கப்படுபவன், அநேகவிதமான லோகங்களுக்கு அதிபதி, அஜ்ஞானத்தைப் போக்குபவன், வேதத்தினால் மாத்திரம் அறியப்படுபவன், சப்தஸ்வரூபன், ப்ரஹ்மாவுக்கு வேதத்தை உபதேசித்தவன், கோபசிசுக்களுக்கு மேகம் போன்று விரும்பியதை வர்ஷிப்பவன்.

शिवो रुद्रो नलोनीलो लाङ्गली लाङ्गलाश्रयः ।
पारदः पावनो हंसो हंसारूढो जगत्पतिः ॥

சிவோ ருத்ரோ நலோநீலோ லாங்கலீ லாங்கலாச்ரய: ।
பாரத: பாவநோ ஹம்ஸோ ஹம்ஸாரூடோ ஜகத்பதி: ॥

மங்களகரன், பக்தர்களை ஆநந்தத்தால் அழும்படிச் செய்பவன், நளசக்ரவர்த்தி ஸ்வரூபன், நீலவர்ணன், ஹலாயுதனான பலராமன், மோக்ஷத்தைத் தருபவன், எல்லோரையும் பரிசுத்தமாக ஆக்குபவன், ஹம்ஸாவதாரம் எடுத்தவன், ஹம்ஸத்தின்மேல் ஏறியவன், உலகங்களுக்கு ஸ்வாமியானவன்.

मोहिनीमोहनो मायी महामायो महामखी ।
वृषो वृषाकपिः कालः कालीदमनकारकः ।।
மோஹிநீ மோஹநோ மாயீ மஹாமாயோ மஹாமகீ ।
வ்ருஷோ வ்ருஷாகபி: காலோ காலீதமனகாரக: ॥ 59

மோஹிநீ அவதாரம் எடுத்து எல்லோரையும் மோஹிக்கச் செய்தவன், ப்ரக்ருதிக்கு நியந்தா, மிகவும் ஆச்சர்யமான சக்தியை உடையவன், யாகங்களால் ஆராதிக்கப்படுபவன், ஆச்ரிதர்களுக்கு இஷ்டத்தை வர்ஷிப்பவன், வ்ருஷாகபி எனப்படுபவன், காலஸ்வரூபன், காளியை நியமிப்பவன்.

कुब्जाभाग्यप्रदो वीरः रजकक्षयकारकः ।
कोमलो वारुणो राजा जलजो जलधारकः ।।
குப்ஜாபாக்யப்ரதோ வீர: ரஜகக்ஷயகாரக: ।
கோமலோ வாருணோ ராஜா ஜலஜோ ஜலதாரக: ॥ 60

கூனிக்கு நல்ல ரூபத்தைக் கொடுத்தவன், பராக்ரமமுடையவன், வண்ணான் ஒருவனை அழித்தவன், ம்ருதுஸ்வபாவன், வருணபுத்ரரான வஸிஷ்டர், அகஸ்த்யர் இவர்களுக்கு அந்தர்யாமி, ராஜாவைப்போல் சாஸனம் பண்ணுகிறவன், ஜலத்தில் தோன்றியவன், ஸமுத்ராதி ஜலங்களை தரிப்பவன்.

हारकः सर्वपापघ्नः परमेष्ठी पितामहः ।
खड्गधारी कृपाकारी राधारमणसुन्दरः ।।
ஹாரக: ஸர்வபாபக்ன: பரமேஷ்டீ பிதாமஹ: ।
கட்கதாரீ க்ருபாகாரீ ராதாரமணஸுந்தர: ॥ 61

சிவோ ருத்ரோ நலோநீலோ லாங்கலீ லாங்கலாச்ரய: |
பாரத: பாவநோ ஹம்ஸோ ஹம்ஸாரூடோ ஜகத்பதி: ||

மங்களகரன், பக்தர்களை ஆநந்தத்தால் அழும்படிச் செய்பவன், நளசக்ரவர்த்தி ஸ்வரூபன், நீலவர்ணன், ஹலாயுதனான பலராமன், மோக்ஷத்தைத் தருபவன், எல்லோரையும் பரிசுத்தமாக ஆக்குபவன், ஹம்ஸாவதாரம் எடுத்தவன், ஹம்ஸத்தின்மேல் ஏறியவன், உலகங்களுக்கு ஸ்வாமியானவன்.

मोहिनीमोहनो मायी महामायो महामखी ।
वृषो वृषाकपिः कालः कालीदमनकारकः ।।
மோஹிநீ மோஹநோ மாயீ மஹாமாயோ மஹாமகீ |
வ்ருஷோ வ்ருஷாகபி: காலோ காலீதமனகாரக: || 59

மோஹிநீ அவதாரம் எடுத்து எல்லோரையும் மோஹிக்கச் செய்தவன், ப்ரக்ருதிக்கு நியந்தா, மிகவும் ஆச்சர்யமான சக்தியை உடையவன், யாகங்களால் ஆராதிக்கப்படுபவன், ஆச்ரிதர்களுக்கு இஷ்டத்தை வர்ஷிப்பவன், வ்ருஷாகபி எனப்படுபவன், காலஸ்வரூபன், காளியை நியமிப்பவன்.

कुब्जाभाग्यप्रदो वीरः रजकक्षयकारकः ।
कोमलो वारुणो राजा जलजो जलधारकः ।।
குப்ஜாபாக்யப்ரதோ வீர: ரஜகக்ஷயகாரக: |
கோமலோ வாருணோ ராஜா ஜலஜோ ஜலதாரக: || 60

கூனிக்கு நல்ல ரூபத்தைக் கொடுத்தவன், பராக்ரமமுடையவன், வண்ணான் ஒருவனை அழித்தவன், ம்ருதுஸ்வபாவன், வருணபுத்ரரான வஸிஷ்டர், அகஸ்த்யர் இவர்களுக்கு அந்தர்யாமீ, ராஜாவைப்போல் சாஸனம் பண்ணுகிறவன், ஜலத்தில் தோன்றியவன், ஸமுத்ராதி ஜலங்களை தரிப்பவன்.

हारकः सर्वपापघ्नः परमेष्ठी पितामहः ।
खड्गधारी कृपाकारी राधारमणसुन्दरः ।।
ஹாரக: ஸர்வபாபக்ன: பரமேஷ்டீ பிதாமஹ: |
கட்கதாரீ க்ருபாகாரீ ராதாரமணஸுந்தர: || 61

பாபத்தைப் போக்கடிப்பவன், உத்தமமான ஸ்தானத்தில் இருப்பவன், நான்முகன், நந்தகம் என்கிற கத்தியைத் தாங்குகிறவன், க்ருபையைச் செய்பவன், ராதைக்கு ப்ரீதிகரமான அழகை உடையவன்.

द्वादशारण्यसम्भोगी शेषनागफणालयः ।
कामः श्यामः सुखश्रीदः श्रीपतिः श्रीनिधिः कृती ।।
த்வாதசாரண்யஸம்போகீ சேஷநாகபணாலய: ।
காம: ச்யாம: ஸுகச்ரீத: ஸ்ரீபதி: ஸ்ரீநிதி: க்ருதீ ॥ 62

யமுனைக் கரையில் உள்ள பன்னிரண்டு காடுகளில் கோபர்களுடன் போகத்தைப் பெற்றவன், சேஷன் என்கிற ஸர்ப்பத்தின் தலையில் வசிப்பவன், எல்லோராலும் விரும்பப்படுகிறவன், நீலமேகம் போன்று கருநிறமுடையவன், சுகத்தையும், ஐச்வர்யத்தையும் கொடுப்பவன், லக்ஷமீபதி, லக்ஷ்மிக்கு வாஸஸ்தானமாகியவன், ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதில் ப்ரயத்னமுடையவன்.

हरिर्नारायणो नारो नरोत्तम इषुप्रियः ।
गोपाली चित्तहर्ता च कर्ता संसारतारकः ।।
ஹரிர்நாராயணோ நாரோ நரோத்தம இஷுப்ரிய: ।
கோபாலீ சித்தஹர்த்தாச கர்தா ஸம்ஸாரதாரக: ॥ 63

யாகத்தில் தரும் ஹவிஸ்ஸை ஸ்வீகரிப்பவன், நாராயணன் மனிதர்களில் அந்தர்யாமியாக இருப்பவன், புருஷோத்தமன், பாணத்தை எய்தலில் விருப்பமுடையவன், கோபாலவேஷதாரி, எல்லோருடைய சித்தத்தை ஆகர்ஷிப்பவன், ஸ்வதந்த்ரன், ஸம்ஸாரக் கடலைத் தாண்டுவதற்கு உபாயமானவன்.

आदिदेवो महादेवो गौरीगुरुरनाश्रयः ।
साधुर्मधुर्विधुर्धाता त्राताक्रूरपरायणः ।।
ஆதிதேவோ மஹாதேவ: கௌரீகுருர்நாச்ரய: ।
ஸாதுர்மதுர்விதுர்தாதா த்ராதாக்ரூரபராயண: ॥ 64

முதற்கடவுள், உயர்ந்த தேவதை, பார்வதீ பதியான சிவனுக்குத்

தலைவன், வேறொருவரை ஆச்ரயிக்காதவன், மாதுளானவன், தேனைப்போல் இனிப்பவன், ஸ்ருஷ்டிகர்த்தா, ஜகத்தை தரிப்ப வன், ரக்ஷகன், அக்ரூரரிடத்தில் ப்ரீதியை உடையவன்.

रोलम्बी च हयग्रीवो वानरारिर्वनाश्रयः ।
वनं वनी वनाध्यक्षः महावन्द्यो महामुनिः ।।
ரோலம்பீ ச ஹயக்ரீவ: வாநராரிர்வநாச்ரய: ।
வனம் வநீ வநாத்யக்ஷ: மஹாவந்த்யோ மஹாமுனி: ॥ 65

பக்தர்களான வண்டுகளால் சூழப்பட்டவன், ஹயக்ரீவாவதா ரம் செய்தவன், வாலியின் சத்ரு, காட்டில் வசிப்பவன், நைமி சாரண்ய ஸ்வரூபீ, விளையாடுவதற்கான வனத்தை உடையவன், காட்டுக்கு அதிபதி, வணங்கத் தகுந்த பெருமையை உடையவன், ஜகத்ரக்ஷண சிந்தையை உடையவன்.

स्यामन्तकमणिप्राज्ञो विज्ञो विघ्नविघातकः ।
गोवर्धनो वर्धनीयः वर्धनो वर्धनप्रियः ।।
ஸ்யாமந்தகமணிப்ராஜ்ஞ: விஜ்ஞோ விக்னவிகாதக: ।
கோவர்தனோ வர்தநீய: வர்தனோ வர்தனப்ரிய: ॥ 66

ஸ்யாமந்தகம் என்கிற மணியை அறிவதில் ஸமர்த்தன், ஸர்வஜ்ஞன், விக்னங்களைப் போக்குபவன், பசுக்களை வளர்க்கிற வன், ரிஷிகளால் வளர்க்கத் தகுந்தவன், பக்தியுடையவர்களை வளர்ப் பவன், ப்ரஜைகளைக் காப்பதில் ப்ரீதியுடையவன்.

वर्धन्यो वर्धनी वर्धी वर्धिष्णुः सुमुखप्रियः ।
वर्धितो वृद्धको वृद्धो वृन्दारकजनप्रियः ।।
வர்தன்யோ வர்தனீ வர்தீ வர்திஷ்ணு: ஸுமுகப்ரிய: ।
வர்திதோ வ்ருத்தகோ வ்ருத்தோ ப்ருந்தாரக ஜனப்ரிய: ॥ 67

எப்பொழுதும் வளர்ந்துகொண்டிருப்பவன், ஆச்ரிதர்களை வளர்ப்பவன், வளர்ப்பதை இயற்கையாகச் செய்பவன், சிரித்த முகத்துடன் எல்லோருக்கும் ப்ரியமாகக் காட்சியளிப்பவன், எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பவன், தேவதைகளிடம் ப்ரீதியுடையவன், அவர்களுக்கு ப்ரியன்.

गोपालरमणीभर्ता साम्बकुष्ठविनाशकः ।
रुक्मिणीहरणः प्रेमप्रेमी चन्द्रावलीपतिः ।।
கோபாலரமணீபர்தா ஸாம்பகுஷ்டவிநாசக: ।
ருக்மிணீஹரண: ப்ரேமப்ரேமீ சந்த்ராவளீபதி: ॥ 68

இடைப் பெண்களுக்குக் கணவன் போன்றவன், ஸாம்பன் என்பவனுடைய குஷ்டரோகத்தைப் போக்கியவன், ருக்மிணியை அபஹரித்தவன், அதிக ப்ரீதியை உடையவன், சந்த்ராவளீ என்கிற கோபிகைக்குக் கணவன்.

श्रीकर्ता विश्वभर्ता च नरो नारायणो बली ।
गणो गणपतिश्चैव दत्तात्रेयो महामुनिः ।।
ஸ்ரீகர்தாவிச்வபர்தா ச நரோ நாராயணோ பலீ ।
கணோ கணபதிச்சைவ தத்தாத்ரேயோ மஹாமுனி: ॥ 69

ஸம்பத்தைத் தருபவன், மூவுலகங்களையும் தரிப்பவன், நரநாராயண ஸ்வரூபன், பலமுடையவன், பரிவாரதேவகணங்களுக்கு அதிபதி, தத்தாத்ரேயன் என்கிற முனிவன்.

व्यासो नारायणो दिव्यो भव्यो भावुकधारकः ।
श्वः श्रेयसं शिवं भद्रं भावुकं भाविकं शुभम् ।।
வ்யாஸோ நாராயணோ திவ்யோ பவ்யோ பாவுகதாரக: ।
ச்வஸ்ச்ரேயஸம் சிவம் பத்ரம் பாவுகம் பாவிகம் சுபம் ॥ 70

வ்யாஸமுனிஸ்வரூபன், நாராயணன் ஸ்ரீவைகுண்டத்தில் இருப்பவன், மங்களஸ்வரூபன், ஈச்வரசிந்தை உடையவர்களைக் காப்பாற்றுபவன், மங்களவாசக சப்தங்களால் குறிக்கப்படுபவன்.

शुभात्मकः शुभः शास्ता प्रशास्ता मेघनादहा ।
ब्रह्मण्यदेवो दीनानामुद्धारकरणक्षमः ।।
சுபாத்மக: சுப: சாஸ்தா ப்ரசாஸ்தா மேகநாதஹா ।
ப்ரஹ்மண்யதேவோ தீநாநாமுத்தாரகரணக்ஷம: ॥ 71

ஸங்கல்பரூபமான மூர்த்தியை உடையவன், கட்டளையிடுபவன் அடக்கி ஆள்பவன், ராவணனின் பிள்ளையான மேகநாதனைக் கொன்றவன், பாகவதர்களைதேவதையாகக் கருதுபவன், ஏழைகளை ஏழ்மையிலிருந்து விடுவிப்பவன்.

कृष्णः कमलपत्राक्षः कृष्णः कमललोचनः ।
कृष्णः कामी सदा कृष्णः समस्तप्रियकारकः ॥
க்ருஷ்ண: கமலபத்ராக்ஷ: க்ருஷ்ண: கமலலோசந: ।
க்ருஷ்ண: காமீ ஸதா க்ருஷ்ண: ஸமஸ்தப்ரியகாரக: ॥ 72

பூதேவிக்கு ஸுகத்தைத் தந்தவன், தாமரை மலர் போன்ற திருக்கண்களை உடையவன், நீலமேகம்போல் கருத்ததிருமேனியை உடையவன், பக்தர்களிடம் ஆசையுடையவன், எல்லோருக்குமே ப்ரியத்தைச் செய்பவன்.

नन्दो नन्दी महानन्दी मादी मादनकः किली ।
मिली हिली गिली गोली गोलो गोलालयो गुली ॥
நந்தோ நந்தீ மஹாநந்தீ மாதீ மாதநக: கிலீ ।
மிலீஹிலீகிலீ கோலீ கோலோ கோலாலயோ குலீ ॥ 73

போக்ய போகோபகரணங்களை ஸம்ருத்தமாக உடையவன் நந்தனின் பிள்ளை, மிகப்பெரிய அளவிடமுடியாத ஆனந்தத்தை உடையவன், எப்பொழுதும் ஸந்துஷ்டனாகவே இருப்பவன் பக்தர்களை ஸந்தோஷிக்கச் செய்பவன், பக்தர்களை அனுஸரிப்ப வன், எல்லோருடனும் சமமாகப் பழகுபவன், ஆச்ரிதர்களிடம் நல்ல எண்ணம் உடையவன், ப்ரளயகாலத்தில் ப்ரபஞ்சத்தை விழுங்கிய வன், மனச்சிலையினுடைய திலகத்தை அணிபவன், பசுக்களை மேய்ப்பவன், கோபாலர்களுக்கு ஆச்ரயமானவன், ப்ரயத்னசீலன்.

गुग्गुली मारकी शाखी वटः पिप्पलकः कृती ।
म्लेच्छहा कालकर्ता च यशोदायश एव च ॥
குக்குலீ மாரகீ சாகீ வட: பிப்பலக: க்ருதீ ।
ம்லேச்சஹா காலகர்தா ச யசோதாயச ஏவ ச ॥ 74

மங்களகரமான மூர்த்தியை உடையவன், கட்டளையிடுபவன் அடக்கி ஆள்பவன், ராவணனின் பிள்ளையான மேகநாதனைக் கொன்றவன், பாகவதர்களைதேவதையாகக் கருதுபவன், ஏழைகளை ஏழ்மையிலிருந்து விடுவிப்பவன்.

कृष्णः कमलपत्राक्षः कृष्णः कमललोचनः ।
कृष्णः कामी सदा कृष्णः समस्तप्रियकारकः ।।
க்ருஷ்ண: கமலபத்ராக்ஷ: க்ருஷ்ண: கமலலோசந: ।
க்ருஷ்ண: காமீ ஸதா க்ருஷ்ண: ஸமஸ்தப்ரியகாரக: ॥ 72

பூதேவிக்கு ஸுகத்தைத் தந்தவன், தாமரை மலர் போன்ற திருக்கண்களை உடையவன், நீலமேகம்போல் கருத்ததிருமேனியை உடையவன், பக்தர்களிடம் ஆசையுடையவன், எல்லோருக்குமே ப்ரியத்தைச் செய்பவன்.

नन्दो नन्दी महानन्दी मादी मादनकः किली ।
मिली हिली गिली गोली गोलो गोलालयो गुली ।।
நந்தோ நந்தீ மஹாநந்தீ மாதீ மாதநக: கிலீ ।
மிலீஹிலீகிலீ கோலீ கோலோ கோலாலயோ குலீ ॥ 73

போக்ய போகோபகரணங்களை ஸம்ருத்தமாக உடையவன் நந்தனின் பிள்ளை, மிகப்பெரிய அளவிடமுடியாத ஆனந்தத்தை உடையவன், எப்பொழுதும் ஸந்துஷ்டனாகவே இருப்பவன், பக்தர்களை ஸந்தோஷிக்கச் செய்பவன், பக்தர்களை அனுஸரிப்பவன், எல்லோருடனும் சமமாகப் பழகுபவன், ஆச்ரிதர்களிடம் நல்ல எண்ணம் உடையவன், ப்ரளயகாலத்தில் ப்ரபஞ்சத்தை விழுங்கியவன், மனச்சிலையினுடைய திலகத்தை அணிபவன், பசுக்களை மேய்ப்பவன், கோபாலர்களுக்கு ஆச்ரயமானவன், ப்ரயத்னசீலன்.

गुग्गुली मारकी शाखी वटः पिप्पलकः कृती ।
म्लेच्छहा कालकर्ता च यशोदायश एव च ।।
குக்குலீ மாரகீ சாகீ வட: பிப்பலக: க்ருதீ ।
ம்லேச்சஹா காலகர்தா ச யசோதாயச ஏவ ச ॥ 74

குக்குல என்கிற வ்ருக்ஷஸ்வரூபி, புல்லாங்குழல் உடையவன், வேத சாகைகளால் அறிவிக்கப்பட்டவன், ஆலமரஸ்வரூபி, அரசமரஸ்வரூபி, தர்மத்தைப் பரப்புவதில் முயற்சிப்பவன், ம்லேச்சர்களை அழிப்பவன், காலத்தை வகுத்தவன், யசோதைக்குக் கீர்த்தியைத் தந்தவன்.

**अच्युतः केशवो विष्णुः हरिः सत्यो जनार्दनः ।**
**हंसो नारायणो लीलो नीलो भक्तिपरायणः ।।**

அச்யுத: கேசவோ விஷ்ணு: ஹரி: ஸத்யோ ஜநார்தந: ।
ஹம்ஸோ நாராயணோ லீலோ நீலோ பக்திபராயண: ॥ 75

ஸ்வரூபத்தாலும், குணத்தாலும் அழிவில்லாதவன், அழகிய கேசபாசங்களை உடையவன், ஸர்வவ்யாபி, ஆச்ரிதர்களுடைய பாபங்களைப் போக்குபவன், மாறுதல் இல்லாதவன், விரோதிஜனங்களை ஹிம்ஸிப்பவன், ஸம்ஸார பயத்தைப் போக்குபவன், நாராயணன், ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை ஆயாஸமிராமல் செய்பவன், கருத்த நிறமுடையவன், பக்தியினால் அடையத் தகுந்தவன்.

**जानकीवल्लभो रामः विरामो विघ्ननाशनः ।**
**सहभानुर्महाभानुः वीरबाहुर्महोदधिः ।।**

ஜாநகீ வல்லபோ ராம: விராமோ விக்நநாசந: ।
ஸஹபாநுர் மஹாபாநு: வீரபாஹுர் மஹோததி: ॥ 76

ஸீதாபதி, அந்தர்யாமியாக இருந்துகொண்டு ரமிப்பவன், ப்ராணிகளுடைய ப்ரளயத்துக்கு இருப்பிடமானவன், விக்னங்களைப் போக்குபவன், ஸ்ரீயுடன் ப்ரகாசிப்பவன், பெரிய சூர்யனைப்போல் ப்ரகாசிப்பவன், பலமுள்ள கைகளை உடையவன், குணங்களின் இருப்பிடமான ஸமுத்ரம்.

**समुद्रोऽब्धिरकूपारः पारावारः सरित्पतिः ।**
**गोकुलानन्दकारी च प्रतिज्ञापरिपालकः ।।**

ஸமுத்ரோப்திரகூபார: பாராவார: ஸரித்பதி: ।
கோகுலாநந்தகாரீ ச ப்ரதிஜ்ஞாபரிபாலக: ॥ 77

அநேகவிதமான ஸமுத்ரஸ்வரூபன், பசுக்கூட்டங்களுக்கு ஆனந்தத்தைத் தருபவன், தான் பண்ணிய ப்ரதிஜ்ஞையை மீறாதவன்.

सदाराम: कृपाराम: महारामो धनुर्धर: ।
पर्वत: पर्वताकारो गयो गेयो द्विजप्रिय: ।।
ஸதாராம: க்ருபாராம: மஹாராமோ தநுர்தர: ।
பர்வத: பர்வதாகாரோ கயோகேயோ த்விஜப்ரிய: ॥ 78

ஸஜ்ஜனங்களுடைய ப்ரீதிக்கு இலக்கானவன், தயையோடு கூடியவன், ஸ்வரூபத்தாலும், குணத்தாலும் எல்லோருடைய ப்ரீதிக்கு இலக்கானவன், சத்ருக்களை அழிப்பதற்காக வில்லை ஏந்தியவன், மலையைப்போல் அசைக்கமுடியாதவன், மலைபோன்ற ஆக்ருதியை உடையவன், கயாஸ்வரூபீ, துதிக்கத் தகுந்தவன், ப்ராம்மணர்களுக்கு ப்ரியன்.

कम्बलाश्वतरो रामो रामायणप्रवर्तक: ।
द्यौर्दिवो दिवसो दिव्यो भव्यो भावी भयापह: ।।
கம்பலாச்வதரோ ராம: ராமாயண ப்ரவர்தக: ।
த்யௌர்திவோ திவஸோ திவ்யோ பவ்யோ பாவீ பயாபஹ: ॥ 79

கம்பலன் என்கிற மானாகவும், அச்வதரம் என்கிற ஸர்ப ரூபமாகவும் இருப்பவன், ராமன் ராமாயணத்தைப் பரவச்செய்தவன், த்யுலோகத்தில் வசிப்பவன், த்யுலோகத்தை ப்ரகாசிக்கப்பண்ணு பவன், ஸ்ரீவைகுண்டத்தில் இருப்பவன், கல்யாண ஸ்வரூபன், பக்தர்களிடம் நல்ல புத்தியை உடையவன், பயத்தைப் போக்குபவன்.

पार्वतीभाग्यसहितो भर्ता लक्ष्मीविलासवान् ।
विलासी साहसी सर्वी गर्वी गर्वितलोचन: ।।
பார்வதீபாக்யஸஹிதோ பர்த்தா லக்ஷ்மீவிலாஸவான் ।
விலாஸீ ஸாஹஸீஸர்வீ கர்வீ கர்விதலோசந: ॥ 80

பார்வதீ பதியான சிவனோடு இருப்பவன், லக்ஷ்மியுடன் செயல்படுபவன், கோபிகளுடன் விளையாடுபவன், சத்ருக்களை

தண்டிப்பவன், எல்லா ப்ரபஞ்சங்களையும் சரீரமாக உடையவன், அஹங்காரமுடையவன், உத்க்ருஷ்டமான கண்களை உடையவன்.

मुरारिर्लोकधर्मज्ञः जीवनो जीवनान्तकः ।
यमो यमादियमनो यामी यामविधायकः ।।
முராரிர் லோகதர்மஜ்ஞ: ஜீவனோ ஜீவநாந்தக: ।
யமோ யமாதியமநோ யாமீ யாமவிதாயக: ॥ 81

முரன் என்கிற அசுரனுக்கு சத்ருவானவன், உலகுக்கு நன்மையைத் தரும் தர்மத்தை அறிந்தவன்,எல்லா ஜந்துக்களையும் பிழைக்கும்படி செய்பவன், ப்ரளயகாரகன், யமஸ்வரூபன், யமன் முதலியவர்களை அடக்கி ஆள்பவன், ஸர்வாந்தர்யாமி, யாமம் என்கிற காலத்தை ஏற்படுத்தியவன்.

वसुली पांसुली पांसुः पाण्डुरर्जुनवल्लभः ।
ललिता चन्द्रिकामाली माली मालाम्बुजाश्रयः ।।
வஸுலீபாம்ஸுலீ பாம்ஸு: பாண்டுரர்ஜுநவல்லப: ।
லலிதா சந்த்ரிகாமாலீ மாலீ மாலாம்புஜாச்ரய: ॥ 82

தனத்தைக் கொடுப்பவன், தூசி நிறைந்த திருமேனியை உடையவன், பக்தர்களுக்கு விரோதிகளை நசிக்கச் செய்பவன், பரிசுத்தமானவன், அர்ஜுனனுக்கு ப்ரியன், பக்தர்களை விரும்புபவன், மல்லிகைப் பூவினால் ஆகிய மாலையை தரிப்பவன், வைஜயந்தீ என்கிற மாலையை தரிப்பவன், பத்மமாலையை தரிப்பவன்.

अम्बुजाक्षो महायज्ञः दक्षः चिन्तामणिः प्रभुः ।
मणिर्दिनमणिश्चैव केदारो बदरीश्रयः ।।
அம்புஜாக்ஷோ மஹாயஜ்ஞ: தக்ஷ: சிந்தாமணி: ப்ரபு: ।
மணிர்தினமணிச்சைவ கேதாரோ பதரீச்ரய: ॥ 83

தாமரைமலர் போன்ற கண்களை உடையவன், மஹாயஜ்ஞங்களால் ஆராதிக்கப்படுபவன், எல்லா கருமங்களையும் சீக்கிரமாக பண்ணுபவன், சிந்தாமணியைப் போல் நினைத்த பயன்களைக் கொடுப்பவன், போகம், மோக்ஷம் முதலிய பலன்களைக்

கொடுப்பதில் சக்தியுடையவன், மணியைப் போல் ப்ரகாசிப்பவன், ஸூர்யனைப்போல் ப்ரகாசிப்பவன், கேதாரம் என்கிற க்ஷேத்ரத்தில் வசிப்பவன், பதரிகாச்ரமவாஸியான நாராயணன்.

बदरीवनसंप्रीतः व्यासः सत्यवतीसुतः ।
अमरारिनिहन्ता च सुधासिन्धुविधूदयः ॥
பதரீவந ஸம்ப்ரீத: வ்யாஸ: ஸத்யவதீஸுத: ।
அமராரிநிஹந்தா ச ஸுதாஸிந்து விதூதய: ॥ 84

இலந்தம்பழமுள்ள காட்டில் ப்ரீதியை உடையவன், வ்யாஸ முனியானவன், ஸத்யவதியின் புத்ரன், தேவதைகளுக்குச் சத்ருக்களான ராவணன் முதலியவர்களை ஒழிப்பவன், ஸமுத்ரத்திலிருந்து அம்ருதம், சந்த்ரன் இவர்கள் உண்டானதற்குக் காரணமானவன்.

चन्द्रो रविः शिवः शूली चक्री चैव गदाधरः ।
श्रीकर्ता श्रीपतिः श्रीदः श्रीदेवो देवकीसुतः ॥
சந்த்ரோ ரவி: சிவ: சூலீ சக்ரீ சைவ கதாதர: ।
ஸ்ரீகர்தா ஸ்ரீபதி: ஸ்ரீத: ஸ்ரீதேவோ தேவகீஸுத: ॥ 85

பக்தர்களுக்கு ஆஹ்லாதத்தை உண்டுபண்ணுகிறவன், சத்ருக்களுக்கு ஸூரியனைப்போல் தாபத்தை உண்டுபண்ணுகிறவன், மங்களஸ்வரூபன், சூலம் என்கிற ஆயுதத்தை உடையவன், சக்ராயுதத்தை தரிப்பவன், கதையை தரிப்பவன், ஐச்வர்யத்தைக் கொடுப்பவன், லக்ஷ்மீபதி, ஸம்பத்தைக் கொடுப்பவன், ஸ்ரீயினால் ப்ரகாசிப்பவன், தேவகியின் புத்ரன்.

श्रीपतिः पुण्डरीकाक्षः पद्मनाभो जगत्पतिः ।
वासुदेवोऽप्रमेयात्मा केशवो गरुडध्वजः ॥
ஸ்ரீபதி: புண்டரீகாக்ஷ: பத்மநாபோ ஜகத்பதி: ।
வாஸுதேவோப்ரமேயாத்மா கேசவோ கருடத்வஜ: ॥ 86

ஸ்ரீய:பதி:, தாமரை போன்ற கண்களை உடையவன், நாபியில் பத்மத்தை உடையவன், ஜகத்துக்கெல்லாம் ஸ்வாமி, வஸுதேவ புத்ரன், அளவிடமுடியாத ஸ்வரூபத்தை உடையவன், கேசவன், கருடக்கொடியை உடையவன்.

नारायणः परं धाम देवदेवो महेश्वरः ।
चक्रपाणिः कलापूर्णो वेदवेद्यो दयानिधिः ।।
நாராயண: பரம்தாம தேவதேவோ மஹேச்வர: ।
சக்ரபாணி: கலாபூர்ணோ வேதவேத்யோ தயாநிதி: ॥ 87

நாராயணன், பரந்தாமன் (உயர்ந்த தேஜஸ்), தேவர்களுக்கும் தேவன், ஈச்வரர்களுக்கு ஈச்வரன், சக்ரத்தைக் கையில் தரிப்பவன், பதினாறு கலைகளுடன் பூர்ணமான சந்த்ரன்போல் ப்ரகாசிப்பவன், அல்லது அறுபத்துநான்கு கலைகளை அறிபவன், வேதப்ரதி பாத்யன், தயைக்கு இருப்பிடம்.

भगवान् सर्वभूतेशो गोपालः सर्वपालकः ।
अनन्तो निर्गुणो नित्यो निर्विकल्पो निरञ्जनः ।।
பகவான் ஸர்வபூதேசோ கோபால: ஸர்வபாலக: ।
அநந்தோ நிர்குணோ நித்யோ நிர்விகல்போ நிரஞ்ஜந: ॥ 88

ஷட்குணபூர்ணன், எல்லா ப்ராணிகளுக்கும் ஈச்வரன், எல்லோரையும் ரக்ஷிப்பவன், ஸத்வம் முதலிய முக்குணமில்லாதவன், தேவன் மனுஷ்யன் முதலிய பாகுபாடு இராதவன், தோஷலேச மிராதவன்.

निराधारो निराकारः निराभासो निराश्रयः ।
पुरुषः प्रणवातीतो मुकुन्दः परमेश्वरः ।।
நிராதாரோ நிராகாரோ நிராபாஸோ நிராச்ரய: ।
புருஷ: ப்ரணவாதீதோ முகுந்த: பரமேச்வர: ॥ 89

தனக்கு வேறொரு ஆதாரமிராதவன், உருவமிராதவன், ப்ரமம் இராதவன், அல்லது தோஷமிராதவன், ஆச்ரயமிராதவன், புருஷன், ப்ரணவத்தைக் காட்டிலும் உயர்ந்தவன், மோக்ஷத்தைக் கொடுப்பவன், உயர்ந்த ஈச்வரன், அல்லது உயர்ந்த லக்ஷ்மிக்கு பர்த்தா.

क्षणावनिः सार्वभौमो वैकुण्ठो भक्तवत्सलः ।
विष्णुर्दामोदरः कृष्णो माधवो मधुरापतिः ।।

க்ஷணாவநி: ஸார்வபௌம: வைகுண்டோ பக்தவத்ஸல: ।
விஷ்ணுர்தாமோதர: க்ருஷ்ணோ மாதவோ மதுராபதி: ॥ 90

உத்ஸவத்துக்குத் தகுந்தவன், எல்லா பூமிக்கும் ஈச்வரன், வைகுண்டத்துக்கு அதிபதி, பக்தர்களிடத்தில் ப்ரீதியுடையவன், ஸர்வவ்யாபி, வயிற்றில் கயிறினால் கட்டப்பட்டவன், க்ருஷ்ணன், மாதவன், மதுரைக்கு ஸ்வாமி = தலைவன்.

देवकीगर्भसम्भूतो यशोदावत्सलो हरिः ।
शिवः सङ्कर्षणः शम्भुर्भूतनाथो दिवस्पतिः ।।
தேவகீகர்ப்பஸம்பூதோ யசோதாவத்ஸலோ ஹரி: ।
சிவ: ஸங்கர்ஷண: சம்பு: பூதநாதோ திவஸ்பதி: ॥ 91

தேவகியினுடைய கர்பத்தில் தோன்றியவன், யசோதைக்கு ப்ரியன், பாபத்தைப் போக்குபவன், மங்களகரன், ஸங்கர்ஷணரூபி, ஸுகத்தைத் தருபவன், ப்ராணிகளுக்கு ஈச்வரன், ஸ்வர்கலோகத் துக்கு அதிபதி.

अव्ययः सर्वधर्मज्ञः निर्मलो निरुपद्रवः ।
निर्वाणनायको नित्यो नीलजीमूतसंनिभः ।।
அவ்யய: ஸர்வதர்மஜ்ஞ: நிர்மலோ நிருபத்ரவ: ।
நிர்வாணநாயகோ நித்யோ நீலஜீமுதஸந்நிப: ॥ 92

நாசமிராதவன், எல்லா தர்மங்களையும் அறிந்தவன், அழுக்கி ராதவன், மற்றவர்களால் பீடிக்கப்படாதவன், மோக்ஷத்தை அடை விப்பவன், பிறப்பு, இறப்பு இராதவன், நீலமேகம் போன்றவன்.

कलाक्षयश्च सर्वज्ञः कमलारूपतत्परः ।
हृषीकेशः पीतवासा वसुदेवप्रियात्मजः ।।
கலாக்ஷயச்ச ஸ்ர்வஜ்ஞ: கமலாருபதத்பர: ।
ஹ்ருஷீகேச: பீதவாஸா: வஸுதேவப்ரியாத்மஜ: ॥ 93

பதினாறு கலைகளுக்கு இருப்பிடம், எல்லாமறிந்தவன், லக்ஷ்மியின் உருவத்தில் ஆஸக்தன், இந்த்ரியங்களை அடக்குபவன், பீதாம்

பரதரன், வசுதேவருக்கு ப்ரீதிபாத்ரமான புத்ரன் அல்லது வசுதேவ பத்னியின் கர்பத்தில் தோன்றியவன்.

नन्दगोपकुमारार्यः नवनीताशनो विभुः ।
पुराणपुरुषः श्रेष्ठः शङ्खपाणिः सुविक्रमः ।।
நந்தகோபகுமாரார்ய: நவநீதாசனோ விபு: ।
புராணபுருஷ: ச்ரேஷ்ட: சங்கபாணி: ஸுவிக்ரம: ॥ 94

நந்தகோபருடைய உயர்ந்த புத்ரன், வெண்ணைகளைத் திருடி உண்டவன், எங்கும் வ்யாபித்தவன்,எப்பொழுதும் உள்ள புருஷன், எல்லோரிலும் உயர்ந்தவன், பாஞ்சஜன்யம் என்கிற சங்கத்தை தரிப்பவன், அதிக பராக்ரமம் உடையவன்.

अनिरुद्धश्चक्ररथः शार्ङ्गपाणिश्चतुर्भुजः ।
गदाधरः सुरार्तिघ्नो गोविन्दो नन्दकायुधः ।।
அநிருத்தச் சக்ரரத: சார்ங்கபாணிச் சதுர்புஜ: ।
கதாதர: ஸுரார்திக்னோ கோவிந்தோ நந்தகாயுத: ॥ 95

யுத்தத்தில் யாராலும் வெல்லமுடியாதவன், சக்ரரதம் என்கிற தேரை உடையவன், சார்ங்கம் என்கிற வில்லை தரிப்பவன், நான்கு புஜங்களை உடையவன், கதையை தரிப்பவன், தேவதைகளுக்கு ராவணாதிகளால் ஏற்படும் பீடையைப் போக்குபவன், கோவிந்தன், நந்தகம் என்கிற கத்தியை ஏந்துபவன்.

वृन्दावनचरः शौरिर्वेणुवाद्यविशारदः ।
तृणावर्तान्तको भीमसाहसी बहुविक्रमः ।।
ப்ருந்தாவநசர: சௌரி: வேணுவாத்யவிசாரத: ।
த்ருணாவர்தாந்தகோ பீமஸாஹஸீ பஹுவிக்ரம: ॥ 96

ப்ருந்தாவனத்தில் ஸஞ்சரிப்பவன், சூரர்களுடைய குலத்தில் பிறந்தவன், புல்லாங்குழல் ஊதுவதில் ஸமர்த்தன், த்ருணாவர்தன் என்கிற அசுரனைக் கொன்றவன், பயங்கரமான ஸாஹஸத்தைச் செய்பவன், பலவிதங்களான பராக்ரமங்களை உடையவன்.

शकटासुरसंहारी बकासुरविनाशनः ।
धेनुकासुरसंहारी पूतनारिर्नृकेसरी ।।
சகடாஸுரஸம்ஹாரீ பகாஸுரவிநாசந: ।
தேனுகாஸுரஸம்ஹாரீ பூதநாரிர்ந்ருகேஸரீ ॥ 97

சகடாசுரனை ஸம்ஹரித்தவன், பகாசுரனை அழித்தவன், தேனுகாசுரனைக் கொன்றவன், பூதனைக்கு சத்ருவானவன், புருஷச்ரேஷ்டன்.

पितामहो गुरुस्साक्षात् प्रत्यगात्मा सदा शिवः ।
अप्रमेयः प्रभुः प्राज्ञोऽप्रतर्क्यः स्वप्नवर्धनः ।।
பிதாமஹோ குரு: ஸாக்ஷாத் ப்ரத்யகாத்மா ஸதாசிவ: ।
அப்ரமேய: ப்ரபு: ப்ராஜ்ஞோऽப்ரதர்க்ய: ஸ்வப்னவர்தந: ॥ 98

சதுர்முக ஸ்வரூபன், முக்யமான குரு, தனக்குத் தானே ப்ரகாசிப்பவன், எப்பொழுதும் மங்களமானவன், அளவிடமுடியாத ஸ்வரூபத்தையும், குணங்களையும் உடையவன், எல்லோருக்கும் ப்ரபு, உத்க்ருஷ்ட ஜ்ஞானமுடையவன், அதாவது எல்லாமறிந்தவன், கேவலதர்க்கத்தால் அறியமுடியாதவன், நல்ல கார்யங்களைச் செய்பவர்களுக்கு ஸ்வப்னத்தில் சுபஸூசகமான வஸ்துக்களைக் காண்பித்து அதன்மூலமாக மேன்மையைத் தருபவன்.

धन्यो मान्यो भवो भावो धीरः शान्तो जगत्गुरुः ।
अन्तर्यामीश्वरो दिव्यो दैवज्ञो देवसंस्तुतः ।।
தன்யோ மான்யோ பவோ பாவோதீர: சாந்தோ ஜகத்குரு: ।
அந்தர்யாமீச்வரோ திவ்யோ தைவஜ்ஞோ தேவஸம்ஸ்துத: ॥ 99

பக்தர்களுக்குச் செய்யவேண்டியதைச் செய்பவன், எல்லோராலும் கொண்டாடத் தகுந்தவன், உலகம் தோன்றுவதற்கு மூலக் காரணம், ஸகல ப்ரபஞ்ச சரீரகன், தைர்யமுடையவன், பசி, தாகம், சோகம், மோகம், கிழத்தனம், மரணம் என்கிற ஆறும் இராதவன், ஜகத்துக்கெல்லாம் குரு, அந்தர்யாமீ, ஈச்வரன், ஸ்ரீவைகுண்டத்தில் வசிப்பவன், சுபாசுபங்களை அறிந்தவன், தேவதைகளால் துதிக்கப் படுகிறவன்.

क्षीराब्धिशयनो धाता लक्ष्मीवाँल्लक्ष्मणाग्रजः ।
धात्रीपतिरमेयात्मा चन्द्रशेखरपूजितः ।।
க்ஷீராப்திசயநோ தாதா லக்ஷ்மீவான் லக்ஷ்மணாக்ரஜ: ।
தாத்ரீபதிரமேயாத்மா சந்த்ரசேகரபூஜித: ॥ 100

க்ஷீரஸமுத்ரத்தில் சயனித்துக்கொண்டிருப்பவன், ஸர்வ ஜகத்தையும் ஸ்ருஷ்டிப்பவன், லக்ஷ்மியைவிட்டுப் பிரியாதவன், லக்ஷ்மணனுடைய தமையன், ஜகத்தை தரிக்கும் லோகமாதாவான லக்ஷ்மியின் பர்த்தா, அளவிடமுடியாத ஸ்வரூபத்தை உடையவன், பரமசிவனால் பூஜிக்கப்படுபவன்.

लोकसाक्षी जगच्चक्षुः पुण्यचारित्रकीर्तनः ।
कोटिमन्मथसौन्दर्यः जगन्मोहनविग्रहः ।।
லோகஸாக்ஷீ ஜகச்சக்ஷு: புண்யசாரித்ரகீர்த்தன: ।
கோடிமன்மதஸௌந்தர்ய: ஜகன்மோஹநவிக்ரஹ: ॥ 101

உலகில் நடப்பதை எல்லாம் பார்த்துக்கொண்டிருப்பவன், தேவதைகளுக்கும், மனிதர்களுக்கும் கண்ணானவன், பரமபாவன மான நடத்தையை உடையவன், அதாவது எவனுடைய சரிதத்தைச் சொல்வதால் பரிசுத்தி ஏற்படுகிறதோ அப்படிப்பட்ட சரிதத்தை உடையவன், கோடி மன்மதர்களைப்போன்ற அழகை உடையவன், ஜகத்துக்கு மோஹத்தை உண்டுபண்ணக்கூடிய திருமேனியை உடையவன்.

मन्दस्मिताननो गोपो गोपिकापरिवेष्टितः ।
फुल्लारविन्दनयनः चाणूरान्ध्रनिषूदनः ।।
மந்தஸ்மிதாநநோ கோபோ கோபிகாபரிவேஷ்டித: ।
புல்லாரவிந்தநயந: சாணூராந்த்ர நிஷூதந: ॥ 102

புன்சிரிப்புடன் கூடிய முகத்தை உடையவன், பசுக்களைக் காப்பவன், கோபிகைகளால் சூழப்பட்டவன், மலர்ந்த தாமரை போன்ற திருக்கண்களை உடையவன், சாணூரன் என்ற மல்யுத்த வீரனையும், தெலுங்குதேசத்தைச் சேர்ந்த முஷ்டிகன் என்கிற அசுரனையும் கொன்றவன்.

इन्दीवरदलश्यामो बर्हिबर्हावतंसकः ।
मुरलीनिनदाह्लादः दिव्यमाल्याम्बरावृतः ।।
இந்தீவரதலச்யாமோ பர்ஹி பர்ஹாவதம்ஸக: ।
முரளீநிநதாஹ்லாத: திவ்யமால்யாம்பராவ்ருத: ॥ 103

கருநெய்தல் போன்று கறுப்பு நிறமுடையவன், தலையில் மயில்தோகையை அணிபவன், புல்லாங்குழல் கானத்தால் எல்லோரையும் மகிழ்விப்பவன், திவ்யமான மாலையையும், வஸ்த்ரத்தையும் அணிபவன்.

सुकपोलयुगः सुभ्रूयुगलः सुललाटकः ।
कम्बुग्रीवो विशालाक्षो लक्ष्मीवान् शुभलक्षणः ।।
ஸுகபோலயுக: ஸுப்ரூயுகல: ஸுலலாடக: ।
கம்புக்ரீவோ விசாலாக்ஷோ லக்ஷ்மீவான் சுபலக்ஷண: ॥ 104

அழகான தாடைகளை உடையவன், அழகான புருவங்களை உடையவன், அழகிய நெற்றியை உடையவன், சங்குபோன்ற கழுத்தை உடையவன், விசாலமான கண்களை உடையவன், பளபளப்பான திருமேனியை உடையவன், ஸாமுத்ரிகாலக்ஷணங்களோடு கூடியவன்.

पीनवक्षाश्चतुर्बाहुश्चतुर्मूर्तिस्त्रिविक्रमः ।
कलङ्करहितः शुद्धः दुष्टशत्रुनिबर्हणः ।।
பீனவக்ஷா: சதுர்பாஹு: சதுர்மூர்த்திஸ்த்ரிவிக்ரம: ।
களங்கரஹித: சுத்த: துஷ்டசத்ருநிபர்ஹண: ॥ 105

பருத்த மார்புடையவன், நான்கு புஜங்களை உடையவன், வாசுதேவ, ஸங்கர்ஷணாதி நான்கு மூர்த்தியை உடையவன், மூன்று அடிகளால் உலகை அளந்தவன், களங்கமற்றவன் (அழுக்கில்லாதவன்), பரிசுத்தமானவன், சத்ருக்களை அழிப்பவன்.

किरीटकुण्डलधरः कटकाङ्गदमण्डितः ।
मुद्रिकाभरणोपेतः कटिसूत्रविराजितः ।।

கிரீடகுண்டலதர: கடகாங்கத மண்டித: ।
முத்ரிகாபரணோபேத: கடிஸூத்ரவிராஜித: ॥ 106

கிரீடத்தையும், குண்டலத்தையும் தரிப்பவன், தோள்வளைகளாலும், கைவளைகளாலும் அலங்கரிக்கப்பட்டவன், மோதரங்கள் அணிந்தவன், கடிஸூத்ரத்தால் (இடுப்பில் தங்கக் கயிறினால்) ப்ரகாசிப்பவன்.

मञ्जीररञ्जितपदः सर्वाभरणभूषितः ।
विन्यस्तपादयुगलो दिव्यमङ्गलविग्रहः ॥
மஞ்ஜீரரஞ்ஜிதபத: ஸர்வாபரணபூஷித: ।
வின்யஸ்தபாதயுகலோ திவ்யமங்களவிக்ரஹ: ॥ 107

சதங்கத்தினால் அதாவது காலில் பூணும் ஆபரணத்தினால் விளங்குபவன், இன்னும் எல்லா ஆபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டவன், பக்தர்களுடைய தலையில் வைக்கப்பட்ட திருவடிகளை உடையவன், திவ்யமங்கள விக்ரஹத்தோடு கூடியவன்.

गोपिकानयनानन्दः पूर्णचन्द्रनिभाननः ।
समस्तजगदानन्दः सुन्दरो लोकनन्दनः ॥
கோபிகாநயநாநந்த: பூர்ணசந்த்ரநிபாநந: ।
ஸமஸ்தஜகதாநந்த: ஸுந்தரோ லோகநந்தந: ॥ 108

கோபகன்னிகைகளின் கண்களுக்கு ஆநந்தத்தைத் தருபவன், பூர்ணசந்த்ரன் போன்ற திருமுகமண்டலமுடையவன், எல்லா உலகத்தவர்களையும் ஆநந்திக்கச் செய்பவன், எல்லா அழகுகளுக்கும் மேம்பட்ட அழகை உடையவன், பார்வைமாத்திரத்தால் உலகுக்கு ஆனந்தத்தைத் தருபவன்.

यमुनातीरसञ्चारी राधामन्मथवैभवः ।
गोपनारीप्रियो दान्तो गोपीवस्त्रापहारकः ॥
யமுநாதீரஸஞ்சாரீ ராதாமன்மதவைபவ: ।
கோபநாரீப்ரியோதாந்தோ கோபீவஸ்த்ராபஹாரக: ॥ 109

யமுனையின் கரையில் ஸஞ்சரிப்பவன், ராதைக்கு ப்ரேமத்தை உண்டுபண்ணுபவன், கோபஸ்த்ரீகளுக்கு ப்ரியன், ஆயிஷ்டமான இந்த்ரியங்களை அடக்கினவன், கோபிகைகளுடைய வஸ்த்ரங்களை அபகரித்தவன்.

शृङ्गारमूर्तिः श्रीधामा तारको मूलकारणम् ।
सृष्टिसंरक्षणोपायः क्रूरासुरविभञ्जनः ।।
ச்ருங்காரமூர்த்தி: ச்ரீதாமா தாரகோ மூலகாரணம் ।
ஸ்ருஷ்டிஸம்ரக்ஷணோபாய: க்ரூராஸுரவிபஞ்ஜந: ॥ 110

ப்ரீதிகரமான மூர்த்தியை உடையவன், லக்ஷ்மியின் ஸம்பந்தத்தால் ஒளிமிக்கவன், துக்கங்களைப் போக்கடிப்பவன், ப்ரபஞ்சத்துக்கு மூலகாரணமானவன், ஜகத்தின் ஸ்ருஷ்டிக்கும், ஸ்திதிக்கும் காரணமானவன், க்ரூரர்களான அசுரர்களை அழித்தவன்.

नरकासुरसंहारी मुरारिररिमर्दनः ।
आदितेयप्रियो दैत्यभीकरो यदुशेखरः ।।
நரகாசுரஸம்ஹாரீ முராரிரரிமர்தந: ।
ஆதிதேயப்ரியோ தைத்யபீகரோ யதுசேகர: ॥ 111

நரகாசுரனை ஸம்ஹரித்தவன், முரன் என்கிற அசுரனுக்கு சத்ருவானவன், காமக்ரோதாதி சத்ருக்களையும் அழிப்பவன், தேவர்களுக்கு ப்ரியமானவன், அசுரர்களுக்கு பயத்தை உண்டுபண்ணுபவன், யதுவம்சத்தில் உயர்ந்தவன்.

जरासन्धकुलध्वंसी कंसारातिः सुविक्रमः ।
पुण्यश्लोकः कीर्तनीयः यादवेन्द्रो जगन्नुतः ।।
ஜராஸந்தகுலத்வம்ஸீ கம்ஸாராதி: ஸுவிக்ரம: ।
புண்யச்லோக: கீர்தநீய: யாதவேந்த்ரோ ஜகந்நுத: ॥ 112

ஜராஸந்தனுடைய வம்சத்தை அழித்தவன், கம்சனுக்கு சத்ருவானவன், அதாவது கம்ஸனை அழித்தவன், நல்ல பராக்ரமமுடையவன், நல்ல கீர்த்தியை உடையவன், கீர்தனம் பண்ணத் தகுந்தவன் (துதிக்கத் தகுந்தவன்), யாதவர்களுக்குள் உயர்ந்தவன், எல்லோராலும் துதிக்கப்படுபவன்.

रुक्मिणीरमणः सत्यभामाजाम्बवतीप्रियः ।
मित्रविन्दानाग्नजितीलक्ष्मणासमुपासितः ।।
ருக்மிணீரமண: ஸத்யபாமாஜாம்பவதீப்ரிய: ।
மித்ரவிந்தாநாக்நஜிதீ லக்ஷ்மணாஸமுபாஸித: ॥ 113

ருக்மிணியை ஸந்தோஷிக்கச் செய்பவன், ஸத்யபாமா, ஜாம்பவதி இவர்களுக்கு ப்ரியமான கணவன், மித்ரவிந்தா, நாக்னஜிதீ லக்ஷ்மணா என்கிறவர்களுக்குக் கணவன்.

सुधाकरकुले जातोऽनन्तप्रबलविक्रमः ।
सर्वसौभाग्यसम्पन्नो द्वारकापत्तने स्थितः ।।
ஸுதாகரகுலேஜாதோऽநந்தப்ரபலவிக்ரம: ।
ஸர்வஸௌபாக்யஸம்பந்நோ த்வாரகாபத்தநே ஸ்தித: ॥ 114

சந்த்ரவம்சத்தில் தோன்றினவன், அளவிடமுடியாத உயர்ந்த பராக்ரமசீலன், எல்லாவிதமான ஸௌபாக்யங்களை உடையவன், த்வாரகா பட்டணத்தில் இருந்தவன்.

भद्रासूर्यसुतानाथो लीलामानुषविग्रहः ।
सहस्रषोडशस्त्रीशो भोगमोक्षैकदायकः ।।
பத்ராஸூர்ய ஸுதாநாதோ லீலாமாநுஷவிக்ரஹ: ।
ஸஹஸ்ரஷோடசஸ்த்ரீசோ போகமோக்ஷைகதாயக: ॥ 115

ச்ருதகீர்த்தியின் பெண்ணான பத்ரை என்பவளுக்கும், ஸூரியன் பெண்ணான காலிந்தி என்பவளுக்கும் கணவன், விளையாட்டுக்காக ஸ்வீகரிக்கப்பட்ட ராமக்ருஷ்ணாதி சரீரங்களை உடையவன், பதினாறாயிரம் பெண்களுக்கு பர்த்தா, ஸ்வர்க்காதி போகத்தையும், மோக்ஷத்தையும் கொடுப்பவன்.

वेदान्तवेद्यः संवेद्यो वैद्यो ब्रह्माण्डनायकः ।
गोवर्धनधरो नाथः सर्वजीवदयापरः ।।
வேதாந்தவேத்ய: ஸம்வேத்யோ வைத்யோ ப்ரஹ்மாண்டநாயக: ।
கோவர்த்தனதரோ நாத: ஸர்வஜீவதயாபர: ॥ 116

உபநிஷத்துக்களால் அறியத்தகுந்தவன், மோக்ஷத்தை விரும்புபவர்களால் அறியவேண்டியவன், எல்லா வித்யைகளையும் அறிந்தவன், ப்ரஹ்மாண்டங்களுக்கு நாயகன், கோவர்த்தன மலையைத் தாங்கியவன், ஸர்வஸ்வாமியானவன், எல்லா ப்ராணிகளிடத்திலும் தயையை உடையவன்.

मूर्तिमान् सर्वभूतात्मा आर्तत्राणपरायणः ।
सर्वज्ञः सर्वसुलभः सर्वशास्त्रविशारदः ।।
மூர்த்திமான் ஸர்வபூதாத்மா ஆர்த்தத்ராணபராயண: ।
ஸர்வஜ்ஞ: ஸர்வஸுலப: ஸர்வசாஸ்த்ரவிசாரத: ॥ 117

ப்ரசஸ்தமான ரூபத்தை உடையவன், ஸர்வப்ராணிகளுக்கும் அந்தராத்மா, துக்கப்படுகிறவர்களைக் காப்பாற்றுதலில் ஊற்றமுடையவன், எல்லாமறிந்தவன், எல்லோருக்கும் ஸுலபன், எல்லா சாஸ்த்ரங்களிலும் வல்லவன்.

षड्गुणैश्वर्यसम्पन्नः पूर्णकामो धुरन्धरः ।
महानुभावः कैवल्यदायको लोकनायकः ।।
ஷட்குணைச்வர்யஸம்பந்ந: பூர்ணகாமோ துரந்தர: ।
மஹாநுபாவ: கைவல்யதாயகோ லோகநாயக: ॥ 118

ஆறுகுணங்களாகிய ஐச்வர்யத்தை உடையவன், விரும்பியவற்றையெல்லாம் அடைந்தவன், ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமாகிற பளுவைத் தாங்கும் சக்தியை உடையவன், கொண்டாடத் தகுந்த ப்ரபாவத்தை உடையவன், மோக்ஷத்தைக் கொடுப்பவன், ஸர்வலோகங்களுக்கும் நாதன்.

आदिमध्यान्तरहितः शुद्धसात्त्विकविग्रहः ।
असमानः समस्तात्मा शरणागतवत्सलः ।।
ஆதிமத்யாந்தரஹித: சுத்தஸாத்விகவிக்ரஹ: ।
அஸமாந: ஸமஸ்தாத்மா சரணாகதவத்ஸல: ॥ 119

முதல், நடுவு, கடைசி இராதவன், சுத்தஸத்வமயமான திருமேனியை உடையவன், நிகரில்லாதவன், எல்லாவற்றிற்கும்

ஆத்மாவானவன், சரணாகதர்களிடத்தில் மிக நேசமுடையவன்.

उत्पत्तिस्थितिसंहारकारणं सर्वकारणम् ।
गम्भीरः सर्वभावज्ञः सच्चिदानन्दविग्रहः ।।
உத்பத்திஸ்திதிஸம்ஹாரகாரணம் ஸர்வகாரணம் ।
கம்பீர: ஸர்வபாவஜ்ஞ: ஸச்சிதாநந்த விக்ரஹ: ॥ 120

ஜகத்தின் உத்பத்தி ஸ்திதி ஸம்ஹாரம் இவைகளுக்குக் காரணமானவன், ஆழ்ந்த மனதுடையவன், எல்லோருடைய எண்ணங்களையும் அறிபவன், விகாரமிராத ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான திருமேனியை உடையவன்.

विष्वक्सेनः सत्यसन्धः सत्यवाक् सत्यविक्रमः ।
सत्यव्रतः सत्यरतः सत्यधर्मपरायणः ।।
விஷ்வக்ஸேந: ஸத்யஸந்த: ஸத்யவாக் ஸத்யவிக்ரம: ।
ஸத்யவ்ரத: ஸத்யரத: ஸத்யதர்மபராயண: ॥ 121

நான்குபுறமும் ஸேனையை உடையவன், ஸத்யமான ப்ரதிஜ்ஞையை உடையவன், ஸத்யமான வாக்கை உடையவன், ஸத்யமான பராக்ரமத்தை உடையவன், ஸத்யமான ஸங்கல்பத்தை உடையவன், உண்மை பேசுபவன், ஸத்யத்திலும், தர்மத்திலும் ஆஸக்தியுடையவன்.

आपन्नार्तिप्रशमनः द्रौपदीमानरक्षकः ।
कन्दर्पजनकः प्राज्ञो जगन्नाटकवैभवः ।।
ஆபந்நார்த்தி ப்ரசமந: த்ரௌபதீமாநரக்ஷக: ।
கந்தர்பஜநக: ப்ராஜ்ஞ: ஜகந்நாடகவைபவ: ॥ 122

ஆபத்திலுள்ளவர்களுடைய துக்கத்தைப் போக்குபவன், த்ரௌபதியின் மானத்தைக் காப்பாற்றியவன், ப்ரத்யும்னனின் தகப்பன், உயர்ந்த அறிவுடையவன், ஜகத்ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்களாகிய ஐச்வர்யத்தை உடையவன்.

भक्तिवश्यो गुणातीतः सर्वैश्वर्यप्रदायकः ।
दमघोषसुतद्वेषी बाणबाहुविखण्डनः ॥
பக்திவச்யோ குணாதீத: ஸர்வைச்வர்யப்ரதாயக: ।
தமகோஷஸுதத்வேஷீ பாணபாஹுவிகண்டன: ॥

பக்தியினால் வசீகரிக்கத் தகுந்தவன், முக்குணங்களிராதவன், எல்லாவிதமான ஐச்வர்யங்களையும் கொடுப்பவன், தமகோஷன் என்பவனின் பிள்ளையான சிசுபாலனுக்கு சத்ருவானவன், பாணாசுரனுடைய கைகளை வெட்டியவன்.

भीष्मभक्तिप्रदो दिव्यः कौरवान्वयनाशनः ।
कौन्तेयप्रियबन्धुश्च पार्थस्यन्दनसारथिः ॥
பீஷ்மபக்திப்ரதோ திவ்ய: கௌரவாந்வயநாசந: ।
கௌந்தேயப்ரியபந்துச்ச பார்த்தஸ்யந்தனஸாரதி: ॥ 124

பீஷ்மாசார்யருக்கு பக்தியைக் கொடுத்தவன், அப்ராக்ருத லோகத்துக்கு ஸ்வாமியானவன், கௌரவ வம்சத்தை அழித்தவன். குந்தி புத்ரர்களான பாண்டவர்களுக்கு ப்ரியமான பந்து. அர்ஜுனனுடைய தேருக்கு ஸாரதியானவன்.

नारसिंहो महावीरः स्तम्भजातो महाबलः ।
प्रह्लादवरदः सत्यो देवपूज्योऽभयङ्करः ॥
நாரஸிம்ஹோமஹாவீர: ஸ்தம்பஜாதோ மஹாபல: ।
ப்ரஹ்லாதவரத: ஸத்யோ தேவபூஜ்யோऽபயங்கர: ॥ 125

நரசிம்மாவதாரம் செய்தவன், மஹாபராக்ரமசாலி, ஸ்தம்பத்தில் தோன்றியவன், மஹாபலசாலி, ப்ரஹ்லாதனுக்கு வரமளித்தவன். மாறுதலில்லாதவன், தேவதைகளால் பூஜிக்கப்படுபவன், அபயமளிப்பவன்.

उपेन्द्र इन्द्रावरजो वामनो बलिबन्धनः ।
गजेन्द्रवरदः स्वामी सर्वदेवनमस्कृतः ॥
உபேந்த்ர: இந்த்ராவரஜோ வாமநோ பலிபந்தன: ।
கஜேந்த்ரவரத: ஸ்வாமீ ஸர்வதேவநமஸ்க்ருத: ॥ 1

இந்த்ரனுக்கு மேற்பட்டவர், இந்த்ரனுடைய தம்பியாக அவதரித்தவர், வாமனாவதாரம் செய்தவர், பலிச்சக்ரவர்த்தியை வசீகரித்தவர், கஜேந்த்ரனுக்கு வரமளித்தவர், ஜகத்தாகிற ஸொத்துக்கு உடையவன், எல்லா தேவதைகளாலும் வணங்கப்படுகிறவன்.

शेषपर्यङ्कशयनः वैनतेयरथो जयी ।
अव्याहतबलैश्वर्यसम्पन्नः पूर्णमानसः ।।
சேஷபர்யங்கசயநः வைநதேயரதோ ஜயீ ।
அவ்யாஹதபலைச்வர்யஸம்பந்நः பூர்ணமாநஸः ॥ 127

ஆதிசேஷனாகிற படுக்கையில் படுப்பவன், கருடனை வாஹனமாக உடையவன், ஜயசீலன், யாராலும் எதிர்க்கமுடியாத பலம், ஐச்வர்யம் இவைகளை உடையவன், பரிபூர்ணமான மனதை உடையவன் அதாவது இஷ்டபூர்த்தியுடைய மனதை உடையவன்.

योगेश्वरेश्वरः साक्षी क्षेत्रज्ञो ज्ञानदायकः ।
योगिहृत्पङ्कजावासो योगमायासमन्वितः ।।
யோகேச்வரேச்வரः ஸாக்ஷீ க்ஷேத்ரஜ்ஞோ ஜ்ஞாநதாயகः ।
யோகிஹ்ருத்பங்கஜாவாஸோ யோகமாயாஸமந்விதः ॥ 128

கல்யாணகுணங்களுள்ள ஈச்வரர்களுக்கெல்லாம் ஈச்வரன், முக்காலத்திலுள்ள வஸ்துக்களை ப்ரத்யக்ஷமாகக் காண்பவன், அந்தந்த ஜீவன்களுக்குத் தகுந்த சரீரங்களை அறிபவன், ஜ்ஞானத்தைக் கொடுப்பவன், யோகிகளுடைய ஹ்ருதயகமலத்தில் வசிப்பவன், சிந்திக்கமுடியாத சக்தியை உடையவன்.

नादबिन्दुकलातीतश्चतुर्वर्गफलप्रदः ।
सुषुम्नामार्गसञ्चारी देहस्यान्तरसंस्थितः ।।
நாதபிந்துகலாதீதः சதுர்வர்கபலப்ரதः ।
ஸௌஷும்ணாமார்கஸஞ்சாரீ தேஹஸ்யாந்தரஸம்ஸ்திதः ॥ 129

நாதம் பிந்து கலை என்கிற மந்த்ராவயவங்களுக்கு அப்பாற்பட்டவன், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற நான்குவித புருஷார்த்தங்களைக் கொடுக்கிறவன், ஸௌஷும்னாநாடியில்

அந்தர்யாமியாக ஸஞ்சரிப்பவன், சரீரங்களின் உள்ளே இருப்பவன்.

देहेन्द्रियमनःप्राणसाक्षी चेतःप्रसादकः ।
सूक्ष्मः सर्वगतो देही ज्ञानदर्पणगोचरः ।।
தேஹேந்த்ரியமன: ப்ராணஸாக்ஷீ சேத: ப்ரஸாதக: ।
ஸூக்ஷ்ம: ஸர்வகதோ தேஹீ ஜ்ஞாந தர்பணகோசர: ॥ 130

சரீரம், இந்த்ரியம், மனஸ் இவைகளின் செயல்களைக் கண்காணிப்பவன், சித்த சுத்தியைக் கொடுக்கக்கூடியவன், ஸூக்ஷ்மன், இந்த்ரியங்களுக்கு எட்டாதவன், ஸர்வவ்யாபீ, ஸகல ஜகத்தையும் சரீரமாக உடையவன், ஜ்ஞானமாகிய கண்ணாடியில் பார்க்கத் தகுந்தவன்.

तत्त्वत्रयात्मकोऽव्यक्तः कुण्डली समुपाश्रितः ।
ब्रह्मण्यः सर्वधर्मज्ञः शान्तो दान्तो गतक्लमः ।।
தத்வத்ரயாத்மகோऽவ்யக்த: குண்டலீஸமுபாச்ரித: ।
ப்ரஹ்மண்ய: ஸர்வதர்மஜ்ஞ: சாந்தோ தாந்தோ கதக்லம: ॥ 131

சித், அசித், ஈச்வரன் என்கிற மூன்று தத்வங்களாக இருப்பவன், எல்லோருக்கும் ப்ரகாசிக்காதவன், குண்டலம் என்கிற ஆபரணத்தைக் காதில் பூண்டிருப்பவன், ஆப்தர்கள் ஸமீபத்தில் இருப்பவன், வேதங்களுக்கும், வேதங்களை ஓதும் ப்ராம்மணர்களுக்கும் ஹிதமானவன், வேண்டியவன், எல்லா தர்மங்களையும் அறிந்தவன், பசி, தாகம் முதலியவைகள் இல்லாதவன், இந்த்ரியங்களை ஜயித்தவன், அடக்கியவன், களைப்பு அல்லது சோர்வு இராதவன்.

श्रीनिवासः सदानन्दः विश्वमूर्तिर्महाप्रभुः ।
सहस्रशीर्षा पुरुषः सहस्राक्षः सहस्रपात् ।।
ஸ்ரீநிவாஸ: ஸதாநந்தோ விச்வமூர்த்திர்மஹாப்ரபு: ।
ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் ॥ 132

லக்ஷ்மி வஸிக்குமிடமானவன், எப்பொழுதும் ஆநந்தத்தை உடையவன், ப்ரபஞ்சத்தை சரீரமாக உடையவன், ப்ரபுக்களுக்கும்

ப்ரபுவானவன், ஆயிரம் தலைகளை உடையவன், ஆயிரம் கண்களை உடையவன், ஆயிரம் கால்களை உடையவன், ஹ்ருதய குகையில் வசிக்கும் புருஷன்.

समस्तभुवनाधारः समस्तप्राणरक्षकः ।
समस्तसर्वभावज्ञो गोपिकाप्राणवल्लभः ॥
ஸமஸ்தபுவநாதார: ஸமஸ்தப்ராணரக்ஷக: ।
ஸமஸ்தஸர்வபாவஜ்ஞோ கோபிகாப்ராணவல்லப: ॥ 133

எல்லா உலகங்களுக்கும் ஆதாரமானவன், எல்லோருடைய ப்ராணன்களையும் ரக்ஷிப்பவன், எல்லோருடைய எல்லாவிதமான அபிப்ராயங்களையும் அறிந்தவன், கோபிகைகளுக்கு ப்ராணன் போல ப்ரியமானவன்.

नित्योत्सवो नित्यसौख्यो नित्यश्रीर्नित्यमङ्गलः ।
व्यूहार्चितो जगन्नाथः श्रीवैकुण्ठपुराधिपः ॥
நித்யோத்ஸவோ நித்ய ஸௌக்யோ நித்யஶ்ரீர் நித்யமங்கள: ।
வ்யூஹார்ச்சிதோ ஜகந்நாத: ஶ்ரீவைகுண்டபுராதிப: ॥ 134

நித்யம் உத்ஸவங்களைக் கண்டருளுபவன், எப்பொழுதும் ஸுகத்தை உடையவன், சாச்வதமான ஐச்வர்யத்தை உடையவன், எப்பொழுதும் மங்களகரமாக இருப்பவன், வாசுதேவாதி வ்யூஹ ரூபங்களால் பூஜிக்கப்படுபவன், ஜகத்துக்கெல்லாம் அதிபதி, ஶ்ரீவைகுண்டமாகிற நகரத்துக்கு அதிபதியானவன்.

पूर्णानन्दघनीभूतः गोपवेषधरो हरिः ।
कलापकुसुमश्यामः कोमलः शान्तविग्रहः ॥
பூர்ணாநந்தகனீபூத: கோபவேஷதரோ ஹரி: ।
கலாபகுஸுமச்யாம: கோமல: சாந்தவிக்ரஹ: ॥ 135

பரிபூர்ணமான ஆனந்தத்தாலே வ்யாபித்துள்ளவன், இடையர்களுடைய வேஷத்தை ஏற்பவன், பக்தர்களுடைய ஹ்ருதயத்தை அபஹரிப்பவன், கலாபம் என்கிற பூவைப்போன்று கருநிறமுடையவன், ம்ருதுவான சரீரத்தை உடையவன், சாந்தஸ்வபாவமுடையவன்.

गोपाङ्गनावृतोऽनन्तो वृन्दावनसमाश्रयः ।
वेणुवादरतः श्रेष्टो देवानां हितकारकः ।।
கோபாங்கநாவ்ருதோऽநந்தோ ப்ருந்தாவநஸமாச்ரய: ।
வேணுவாதரத: ச்ரேஷ்டோ தேவாநாம் ஹிதகாரக: ॥ 136

கோபஸ்த்ரீகளால் சூழப்பட்டவன், அளவிடமுடியாதவன், ப்ருந்தாவனத்தில் வசிப்பவன், புல்லாங்குழல் ஊதுவதில் ஆசையு டையவன், உயர்ந்தவன், தேவதைகளுக்கு நன்மையைச் செய்பவன்

बालक्रीडासमासक्तो नवनीतस्य तस्करः ।
गोपालकामिनीजारश्चोरजारशिखामणिः ।।
பாலக்ரீடாஸமாஸக்தோ நவநீதஸ்ய தஸ்கர: ।
கோபாலகாமிநீசார: சோரஜாரசிகாமணி: ॥ 137

குழந்தைகள் விளையாடும் விளையாட்டில் ஆர்வமுடையவன், வெண்ணையைத் திருடுபவன், கோபாலர்களுடைய பத்னிகளை கள்வனாக அனுபவிப்பவன், கோபாலர்களுடைய பத்னிகளுக்கு, கள்ளக்காதலன்.

परं ज्योतिः पराकाशः परावासः परिस्फुटः ।
अष्टादशाक्षरो मन्त्रो व्यापको लोकपावनः ।।
பரம்ஜ்யோதி: பராகாச: பராவாஸ: பரிஸ்புட: ।
அஷ்டாதசாக்ஷரோ மந்த்ரோ வ்யாபகோ லோகபாவந: ॥ 138

உயர்ந்த தேஜஸ்ஸ்வரூபன், உத்க்ருஷ்டமாக ப்ரகாசிப்பவன், உயர்ந்த வாஸஸ்தானத்தை உடையவன், பக்தர்களுக்குத் தெளி வாக ப்ரகாசிப்பவன், பதினெட்டு எழுத்துக்களை உடைய மந்த்ரங் களால் அறியப்படுபவன் (ஸந்தானகோபால மந்த்ரம் முதலியவை களால்), எல்லாவற்றையும் வ்யாபித்து இருப்பவன், உலகங்களை பரிசுத்தமாக ஆக்குபவன்.

सप्तकोटिमहामन्त्रशेखरो देवशेखरः ।
विज्ञानज्ञानसन्धानस्तेजोराशिर्जगत्पतिः ।।

ஸப்தகோடிமஹாமந்த்ரசேகரோ தேவசேகர: ।
விஜ்ஞாநஜ்ஞாந ஸந்தாந: தேஜோராசிர்ஜகத்பதி: ॥ 139

எழுகோடி மஹாமந்த்ரங்களால் அறிவிக்கப்படுகிறவன், தேவதைகளுள் உயர்ந்தவன், பொதுவாகவும், சிறப்பாகவும் உள்ள ஜ்ஞானங்களை ஒன்றாகச் சேர்ப்பவன், தேஜஸ்ஸுகளின் குவியல், ஜகத்துக்கெல்லாம் அதிபதி அல்லது ரக்ஷகன்.

भक्तलोकप्रसन्नात्मा भक्तमन्दारविग्रहः ।
भक्तदारिद्र्यदमनो भक्तानां प्रीतिदायकः ॥
பக்தலோகப்ரஸந்நாத்மா பக்தமந்தாரவிக்ரஹ: ।
பக்ததாரித்ர்யதமநோ பக்தாநாம் ப்ரீதிதாயக: ॥ 140

பக்தர்கள் விஷயத்தில் அநுக்ரஹமுள்ள மனதை உடையவன், பக்தர்களுக்கு கல்ப வ்ருக்ஷம்போல் வேண்டியதைத் தருபவன், பக்தர்களுடைய ஏழ்மையைப் போக்குகிறவன் குசேலருக்குப்போல், பக்தர்களுக்குத் தன்னுடைய ஸ்வரூபத்தையும், திருமேனியையும் காண்பித்து ப்ரீதியை உண்டுபண்ணுபவன்.

भक्ताधीनमनाः पूज्यः भक्तलोकशिवङ्करः ।
भक्ताभीष्टप्रदः सर्वभक्ताघौघनिकृन्तनः ॥
பக்தாதீநமநா: பூஜ்ய: பக்தலோகசிவங்கர: ।
பக்தாபீஷ்டப்ரத: ஸர்வபக்தாகௌக நிக்ருந்தந: ॥ 141
अपारकरुणासिन्धुर्भगवान् भक्ततत्परः ॥
அபாரகருணாஸிந்துர்பகவான் பக்ததத்பர: ॥ 142

பக்தர்களுக்கு வசப்பட்ட மனதை உடையவன், பூஜிக்கத் தகுந்தவன், பக்தர்களுக்கு க்ஷேமத்தைத் தருபவன், பக்தர்களுக்கு விரும்பினதைத் தருபவன், எல்லா பக்தர்களுடையவும் பாபங்களை ஒழிப்பவன், அக்கரையிராத தயாஸமுத்ரம், ஷாட்குண்யபரிபூர்ணன், பக்தபராதீனன்.

## अथ फलश्रुतिः

### இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் பண்ணுவதால் உண்டாகும் பயன்கள்

स्मरणात् पापराशीनां खण्डनं मृत्युनाशनम् ।।
ஸ்மரணாத் பாபராசீநாம் கண்டனம் ம்ருத்யுநாசனம் ‖ 1

இந்த கோபால ஸஹஸ்ரநாமங்களை நினைத்தமாத்ரத்தால் பாபங்களின் குவியல்கள் அழிந்துபோகும், ஸம்ஸாரபந்தம் நீங்கும்.

वैष्णवानां प्रियकरं महारोगनिवारणम् ।
ब्रह्महत्यासुरापानं परस्त्रीगमनं तथा ।।
வைஷ்ணவானாம் ப்ரியகரம் மஹாரோகநிவாரணம் ‖
ப்ரஹ்மஹத்யா ஸுராபானம் பரஸ்த்ரீகமநம் ததா ‖ 2

இந்த ஸஹஸ்ரநாம ஸ்மரணமானது வைஷ்ணவர்களுக்கு ப்ரீதியை உண்டுபண்ணும், பெரிய ரோகங்களைப் போக்கும், ப்ரஹ்மஹத்யாபாபமும் , கள்ளைக் குடித்த பாபமும் தொலையும், அயல் ஸ்த்ரீயின் சேர்க்கையால் உண்டான பாபம் விலகும்.

परद्रव्यापहरणं परद्वेषसमन्वितम् ।
मानसं वाचिकं कायं यत्पापं पापसम्भवम् ।।
பரத்ரவ்யாபஹரணம் பரத்வேஷஸமந்விதம் ‖
மானஸம் வாசிகம் காயம் யத் பாபம் பாபஸம்பவம் ‖ 3

அப்படியே அயலாருடைய த்ரவ்யத்தைத் திருடுவதால் வந்த பாபம் அயலானிடத்தில் த்வேஷத்தினால் மனஸ், வாக், சரீரம் இவைகளால் ஏற்பட்ட பாபமும், பாபத்தினால் உண்டான பாபமும் போகும்.

सहस्रनामपठनात् सर्वं नश्यति तत्क्षणात् ।
महादारिद्रयुक्तो यो वैष्णवो विष्णुभक्तिमान् ।।
ஸஹஸ்ரநாமபடனாத் ஸர்வம் நச்யதி தத்க்ஷணாத் ‖
மஹாதாரித்ர்யயுக்தோ யோ வைஷ்ணவோ விஷ்ணுபக்திமான் ‖4

கோபாலஸஹஸ்ரநாமங்களைப் படித்தால் அதே க்ஷணத்தில் எல்லா பாபங்களும் அழியும், மிகுந்த ஏழ்மையினால் வருந்தும் வைஷ்ணவன் விஷ்ணுபக்தியை உடையவனாய்

कार्तिक्यां सम्पठेद्रात्रौ शतमष्टोत्तरं क्रमात् ।
पीताम्बरधरो धीमान् सुगन्धैः पुष्पचन्दनैः ।।
கார்திக்யாம் ஸம்படேத்ராத்ரௌ சதமஷ்டோத்தரம் க்ரமாத் ।
பீதாம்பரதரோ தீமான் ஸுகந்தை: புஷ்பசந்தனை: ॥ 5

கார்த்திகை மாதம் ராத்ரியில் மஞ்சள் நிறமான வெண்பட்டை உடுத்திக்கொண்டு, நல்ல வாசனையுள்ள புஷ்பங்களாலும், சந்தனங்களாலும் இந்த ஸ்தோத்ரத்தை பூஜித்து முறைப்படி பாராயணம் பண்ணத் தெரிந்துகொள்ளவேண்டும்.

पुस्तकं पूजयित्वा तु नैवेद्यादिभिरेव च ।
राधाध्यानाङ्कितो धीरो वनमालाविभूषितः ।।
புஸ்தகம் பூஜயித்வாது நைவேத்யாதிபிரேவ ச ।
ராதாத்யானாங்கிதோ தீரோ வநமாலாவிபூஷித: ॥ 6

புஸ்தகத்தைப் பூஜித்த பிறகு நைவேத்யாதிகளை ஸமர்ப்பித்து வனமாலையை தரித்துக்கொண்டு ராதையை த்யானித்துக்கொண்டு

शतमष्टोत्तरं देवि पठेन्नामसहस्रकम् ।
चैत्रशुक्ले च कृष्णे च कुहूसंक्रान्तिवासरे ।।
சதமஷ்டோத்தரம்தேவி படேந்நாமஸஹஸ்ரகம் ।
சைத்ரக்ருஷ்ணே ச சுக்லேச குஹூஸங்க்ராந்திவாஸரே ॥ 7

இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தை நூற்று எட்டுதரம் படிக்கவேண்டும். மேலும் சித்திரை மாதம் சுக்லபக்ஷத்திலும், க்ருஷ்ண பக்ஷத்திலும், அமாவாஸ்யையன்றும், ஸங்க்ரமண தினத்திலும் படிக்கவேண்டும்.

पठितव्यं प्रयत्नेन त्रैलोक्यं मोहयेत् क्षणात् ।
तुलसीमालया युक्तो वैष्णवो भक्तितत्परः ।।
படிதவ்யம் ப்ரயத்னேன த்ரைலோக்யம் மோஹயேத்க்ஷணாத் ।
துளஸீமாலயா யுக்தோ வைஷ்ணவோ பக்திதத்பர: ॥ 8

படிப்பதைக் கேட்கும் மூவுலகில் உள்ளவர்கள் மோஹிக்கும்படி படிக்கவேண்டும். துளசீதளமாலையையோ, துளசிமணிமாலையையோ தரித்துக்கொண்டு பக்தியுடன் படிக்க வேண்டும்.

रविवारे च शुक्रे च द्वादश्यां श्राद्धवासरे ।
ब्राह्मणं पूजयित्वा च भोजयित्वा विधानतः ।।
ரவிவாரே ச சுக்ரே ச த்வாதச்யாம் ச்ராத்தவாஸரே ।
ப்ராஹ்மணம் பூஜயித்வா ச போஜயித்வா விதாநத: ॥ 9

ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை, த்வாதசி, ச்ராத்ததினம் இந்நாட்களில் ப்ராம்மண போஜனமும், ப்ராம்மணபூஜையுடன் முறைப்படி செய்வித்து

पठेन्नामसहस्त्रं च ततः सिद्धिः प्रजायते ।
महानिशायां सततं वैष्णवो यः पठेत् सदा ।।
படேந் நாமஸஹஸ்ரம் ச தத: ஸித்தி: ப்ரஜாயதே ।
மஹாநிசாயாம் ஸததம் வைஷ்ணவோ ய:படேத்ஸதா ॥ 10

இந்த ஆயிரநாமங்களைப் படித்தால் இஷ்டஸித்தி ஏற்படும் நடுராத்ரியிலும் விடாமல் படிப்பவனுக்கு

देशान्तरगता लक्ष्मीः समायाति न संशयः ।
त्रैलोक्ये च महादेवि सुन्दर्यः काममोहिताः ।।
தேசாந்தரகதா லக்ஷ்மீ: ஸமாயாதி ந ஸம்சய: ।
த்ரைலோக்யே ச மஹாதேவி ஸுந்தர்ய: காமமோஹிதா: ॥ 11

வெளிதேசத்தில் இருக்கும் லக்ஷ்மி தானாகவே வருவாள்

இதில் ஸந்தேகம் வேண்டாம். ஓ மஹாதேவியே! மூவுலகிலுள்ள அழகிய பெண்கள் காமத்தால் மோஹிதர்களாய்

मुग्धाः स्वयं समायान्ति वैष्णवं च भजन्ति ताः ।
रोगी रोगात् प्रमुच्येत बद्धो मुच्येत बन्धनात् ।।
முக்தா: ஸ்வயம் ஸமாயாந்தி வைஷ்ணவம் ச பஜந்தி தா: ।
ரோகீ ரோகாத் ப்ரமுச்யேதே பத்தோ முச்யேத பந்தனாத் ॥ 12

தானே வருவார்கள், ஸஹஸ்ரநாம பாராயணம் பண்ணும் விஷ்ணுபக்தன் கிட்டே வருவார்கள். ரோகமுள்ளவன் ரோகத்திலிருந்து விடுதலை அடைவான். ஸம்ஸாரியானவன் ஸம்ஸாரத்திலிருந்து முக்தியைப் பெறுவான்.

गुर्विणी जनयेत्पुत्रं कन्या विन्दति सत्पतिम् ।
राजानो वश्यतां यान्ति किं पुनः क्षुद्रमानवाः ।।
குர்விணீ ஜநயேத் புத்ரம் கன்யா விந்ததி ஸத்பதிம் ।
ராஜாநோ வச்யதாம்யாந்தி கிம்புந: க்ஷுத்ரமாநவா: ॥ 13

கர்ப்பிணியானவள் புத்ரனைப் பெறுவாள். கன்னிகையானவள் நல்ல பர்த்தாவைப் பெறுவாள். அரசர்கள் வச்யமாவார்கள். சாதாரண மனுஷ்யர்கள் வச்யமாவார்கள் என்பதைப் பற்றி சொல்லவேண்டியதில்லை.

सहस्रनामश्रवणात् पठनात् पूजनात् प्रिये ।
धारणात् सर्वमाप्नोति वैष्णवो नात्र संशयः ।।
ஸஹஸ்ரநாமச்ரவணாத் படநாத் பூஜநாத் ப்ரியே ।
தாரணாத் ஸர்வமாப்நோதி வைஷ்ணவோ நாத்ர ஸம்சய: ॥ 14

ப்ரியையே! இந்த ஆயிரம் நாமங்களைக் கேட்பதாலும், பாராயணம் செய்வதாலும், பூஜிப்பதாலும், மனப்பாடம் ஆக்குவதாலும் விரும்பிய பலன்களை அடைவான் என்பதில் சந்தேகம் இல்லை.

वंशीवटे चान्यवटे तथा पिप्पलकेऽथ वा ।
कदम्बपादपतले गोपालमूर्तिसंनिधौ ।।

வம்சிவடே சான்யவடே ததா பிப்பலகேऽதவா ।
கதம்பபாதபதலே கோபாலமூர்த்தி ஸந்நிதௌ ॥ 15

மூங்கில் மரம், ஆல்மரம், அரசமரம், கதம்பமரம் இவைகள் சமீபத்திலோ, கோபாலமூர்த்தி சமீபத்திலோ

यः पठेद्वैष्णवो नित्यं स याति हरिमन्दिरम् ।
कृष्णेनोक्तं राधिकायै मयि प्रोक्तं तथा शिवे ।।
ய: படேத் வைஷ்ணவோ நித்யம் ஸ யாதி ஹரிமந்திரம் ।
க்ருஷ்ணேநோக்தம் ராதிகாயை மயி ப்ரோக்தம் ததாசிவே ॥ 16

இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் பண்ணும் விஷ்ணு பக்தன் விஷ்ணுவின் உலகுக்குச் செல்வான். இந்த விஷயத்தை க்ருஷ்ணன் ராதைக்கும், பரமசிவனான எனக்கும் கூறியிருக்கிறார்.

नारदाय पुरा प्रोक्तं नारदेन प्रकाशितम् ।
मया तुभ्यं वरारोहे प्रोक्तमेतत्सुदुर्लभम् ।।
நாரதாய புராப்ரோக்தம் நாரதேந ப்ரகாசிதம் ।
மயாதுப்யம் வராரோஹே ப்ரோக்தமேதத் ஸுதுர்லபம் ॥ 17

நாரதருக்கு உபதேசிக்கப்பட்டு அவரால் ப்ரகரமான இந்த ஸ்தோத்ரத்தை நான் உனக்கு உபதேசித்தேன். இது ஸுலபமாகக் கிடைக்கக்கூடியதன்று.

गोपनीयं प्रयत्नेन न प्रकाश्यं कथंचन ।
शठाय पापिने चैव लम्पटाय विशेषतः ।।
கோபநீயம் ப்ரயத்நேந நப்ரகாச்யம் கதம்சன ।
சடாய பாபிநே சைவ லம்படாய விசேஷத: ॥ 18

ஆகையால் இதை ரஹஸ்யமாக வைத்துக்கொண்டு பக்தர்களுக்கே உபதேசிக்கவேண்டும். எல்லோருக்கும் உபதேசிக்கக் கூடாது. முக்யமாக மறைவில் கெடுதலை செய்பவர்களுக்கும் பேராசை உடையவர்களுக்கும் வெளிப்படுத்தக்கூடாது.

न दातव्यं न दातव्यं न दातव्यं कदाचन ।
देयं शिष्याय शान्ताय विष्णुभक्तिरताय च ।।
நதாதவ்யம் நதாதவ்யம் நதாதவ்யம் கதாசன ।
தேயம் சிஷ்யாய சாந்தாய விஷ்ணுபக்திரதாயச ॥ 19

கீழே கூறியவர்களுக்கு உபதேசிக்கவேகூடாது. சிஷ்யனுக்கும் சாந்தமான மனதை உடையவனுக்கும், விஷ்ணுபக்தி உள்ளவனுக்குமே உபதேசிக்க வேண்டும்.

गोदानब्रह्मयज्ञादेर्वाजपेयशतस्य च ।
अश्वमेधसहस्रस्य फलं पाठे भवेद्ध्रुवम् ।।
கோதானப்ரஹ்மயஜ்ஞாதேர் வாஜபேயசதஸ்ய ச ।
அச்வமேதஸஹஸ்ரஸ்ய பலம் பாடே பவேத் த்ருவம் ॥ 20

கோதானம், ப்ரஹ்மயஜ்ஞம், நூறு வாஜபேய யாகம், ஆயிரம் அச்வமேத யாகம் பண்ணுபவர்களுக்கு என்ன பலன் வருமோ அந்த பலன் இந்த ஸ்தோத்ரத்தை பாராயணம் செய்வதால் வரும் என்பது திண்ணம்.

मोहनं स्तम्भनं चैव मारणोच्चाटनादिकम् ।
यद्यद्वाञ्छति चित्तेन तत्तत् प्राप्नोति वैष्णवः ।।
மோஹநம் ஸ்தம்பநம் சைவ மாரணோச்சாடநாதிகம் ।
யத்யத் வாஞ்சதி சித்தேந தத்தத் ப்ராப்நோதி வைஷ்ணவ: ॥ 21

அயலாரை மோகிக்கும்படி செய்வது, அசையாமல் இருக்கச் செய்வது, கொல்வது, விரட்டுதல் முதலிய விரும்பும் பயன்கள் எல்லாவற்றையும் பெறுவான்.

एकादश्यां नरः स्नात्वा सुगन्धिद्रव्यतैलकैः ।
आहारं ब्राह्मणे दत्त्वा दक्षिणां स्वर्णभूषणम् ।।
तत आरम्भकर्तास्य सर्वं प्राप्नोति मानवः ।
शतावृत्तं सहस्रं च यः पठेद्वैष्णवो जनः ।।

ஏகாதச்யாம் நர: ஸ்நாத்வா ஸுகந்தி த்ரவ்யதைலகை: ।
ஆஹாரம் ப்ராஹ்மணே தத்வா தக்ஷிணாம் ஸ்வர்ணபூஷணம் ॥ 22
தத ஆரம்பகர்தாஸ்ய ஸர்வம் ப்ராப்நோதி மாநவ: ।
சதாவ்ருத்தம் ஸஹஸ்ரம் ச ய: படேத் வைஷ்ணவோ ஜந: ॥ 23

நல்ல வாசனை த்ரவ்யம், தைலம் இவைகளால் ஸ்நானம் செய்து ஏகாதசியன்று ப்ராம்மணனுக்கு போஜனம் செய்வித்து, தக்ஷிணையும், தங்கபூஷணமும் கொடுத்து, இந்த ஸ்தோத்ர பாராயணத்தை ஆரம்பித்தால் விரும்பிய எல்லா பலன்களையும் பெறலாம். நூறு தரமோ, ஆயிரம் தரமோ பாராயணம் செய்யவும்.

श्रीबृन्दावनचन्द्रस्य प्रसादात्सर्वमाप्नुयात् ।
यद्गृहे पुस्तकं देवि पूजितं चैव तिष्ठति ।।
ஸ்ரீப்ருந்தாவநசந்த்ரஸ்ய ப்ரஸாதாத் ஸர்வமாப்நுயாத் ।
யத் க்ருஹே புஸ்தகம் தேவி பூஜிதம் சைவ திஷ்டதி ॥ 24

ப்ருந்தாவனத்துக்குச் சந்திரன் போன்றவனான ஸ்ரீக்ருஷ்ண னுடைய அனுக்ரஹத்தால் எல்லா பலன்களையும் பெறுவான். எவனுடைய வீட்டில் இந்த ஸ்தோத்ர புஸ்தகம் பூஜிக்கப்பட்டு இருக்கிறதோ அவனும் இஷ்ட பலனைப் பெறுவான்.

न मारी न च दुर्भिक्षं नोपसर्गभयं क्वचित् ।
सर्पाद्या भूतयक्षाद्या नश्यन्ते नात्र संशयः ।।
ந மாரீ நச துர்பிக்ஷம் நோபஸர்கபயம் க்வசித் ।
ஸர்பாத்யா பூதயக்ஷாத்யா: நச்யந்தே நாத்ரஸம்சய: ॥ 25

அவன் இருக்கும் ஊரில் ஹிம்ஸிப்பவனோ, துர்பிக்ஷமோ, ரோகம் முதலியவைகளால் பயமோ இருக்காது. ஸர்பம் முதலிய ஜந்துக்கள், பூத, பிசாசாதிகள் நடமாடாது. எல்லா துர்ஜந்துக்களும் அழிந்துபோகும். இதில் ஸந்தேகமில்லை.

श्रीगोपालो महादेवि वसेत्तस्य गृहे सदा ।
गृहे यत्र सहस्रं च नाम्नां तिष्ठति पूजितम् ।।

ஸ்ரீகோபாலோ மஹாதேவி வஸேத் தஸ்ய க்ருஹே ஸதா ।
க்ருஹே யத்ர ஸஹஸ்ரம் ச நாம்நாம் திஷ்டதி பூஜிதம் ॥ 26

ஓ மஹாதேவி பார்வதியே! எந்த வீட்டில் கோபால ஸஹஸ்ரநாம புஸ்தகம் பூஜிக்கப்பட்டு இருக்கிறதோ, அந்த வீட்டில் ஸ்ரீயோடு கூடிய கோபாலன் எப்பொழுதும் வசிப்பான்.

ॐ तत्सदिति श्रीसंमोहनतन्त्रे पार्वतीश्वर
संवादे गोपालसहस्रनामस्तोत्रं संपूर्णम् ।।

ஓம் தத் ஸதிதி ஸ்ரீஸம்மோஹநதந்த்ரே பார்வதீச்வர ஸம்வாதே
கோபால ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

ஸம்மோஹநதந்த்ரம் என்கிற க்ரந்தத்திலுள்ள
பார்வதிக்கு பரமேச்வரன் உபதேசித்த கோபாலஸஹஸ்ரநாம
ஸ்தோத்ரம் என்கிற ஸ்தோத்ரம் பூர்த்தியாயிற்று.



விபவ ரூபியாகிய ஸ்ரீ கண்ணன்



ஸ்ரீ கோடி கன்னிகாதானம்
ஸ்ரீ ஸுந்தர தாதயார்ய மஹாதேசிகன்

PRINTER: CELL: 9344351330